விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 யாழ்ப்பாணம் | தை 3 | ஜ: அவ் 5 வியாழக்கிழமை | இதழ் 340 16-1-1986

ஆலங்கேணி சம்பவம்:

## கடற்படை அதிகாரி பலி!

(கொழும்பு)

கடற்படை 'கொமாண்டோ பிரிவைச்சேர்ந்த ஜனுப் பஹர் (30 வயது) நேற்று அதிகாலை திருகோணமலையில் பலியானர்

இதுபற்றி அரசு தரப்பில் தெவிக்கப்படுவதாவது.

ஆலங்கேணிப்பகுதியில்சடத்திச்செல்லப்பட்ட இரண்டு முஸ்லீம்களைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் படைவீரர்களின் குழுவுக்குத் தலைமைதாங்கிச் சென்ற கொமாண்டர்' பிரிவைச் சேர்ந்த பஹர், தீவிரவாதிசள் தங்கியிருந்ததாகக் கருதப்படும் ஒரு இடத்தை அடைந்தார், இந்த இடத்தைப் படைவீரர்கள் சுற்றி வளைத்தனர். அங்கே ஒரு தமிழ்பெண்ணும் இரண்டு வயதுக்குழந்தையும் இருப்பதைக்கண்ட அவர் அவர்களை அங்கிருந்து செல்லும்படிக் கேட்பதற்காக அவர்களை நோக்கி நடந்தார். அதே வேளையில் தீவிரவாதிகள் அவர் மீது கைக்குண்டு ஒன்றை

(8-ம் பக்கம் பார்க்க)

# 'நாடற்றவர்' பிரச்னை தீர்ந்தது!

# 94,000 பேருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை

## பிரார்த்தனை இயக்கம் கைவிடப்பட்டது

(பி. ராஜரட்ணம்)

**இலங்கையில் நாடற்றவர்களாக இருக்கும் 94,000 இந்திய வம்சாவளி மக்களுக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்குவதன்மூலம் 'நாடற்றவர்' பிரச்னைக்கு அரசு முற்றுப்புள்ளி வைத்துள்ளது. இதன்மூலம் மலையகத் தமிழ்மக்களில் நான்கு லட்சத்து அறுபத்து ஒன்பதினாயிரம் பேருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கபபடுகிறது.**

இந்திய- இலங்கை அரசாங்கங்களின் உயரதிகாரிகள் மட்டத்திலான பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து, இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் மொத்தமாக 4 லட்சத்து 69 ஆயிர பேர் இந்தியப் பிரஜா உரிமையும் பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

1964ம் ஆண்டு சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதில் ஏற்பட்ட நடைமுறை பிரச்னையே, இந்த 94 ஆயிரம் பேரும் இதுவரை காலமும் நாடற்றவர்களாக இருக்க நேர்ந்தது.

இவர்களுக்கான பிரஜா உரிமை வழங்குவது சம்பந்தப்பட்ட சட்டம் பெப்ரவரி மாதத்தில் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படவுள்ளதுடன், 18 பாத காலத்தில் இது சம்பந்தப்பட்ட முழு விஷயமும் பூர்த்தியாக்ப்பட்டுவிடும் என்றும் இலங்கை அரசு தரப்பில் தெரிவிக்கப் பட்டது.

இதேவேளை 4 லட்சத்து 21 ஆயிரத்து 207 பேருக்கு இது வரை இந்தியப் பிரஜாவுரிமை

(5-ம் பக்கம் பார்க்க)

### இணைப்பதிகாரி சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வன்னிப்பகுதி முப்படை இணைப்பு அதிகாரி பிரிகேடியர் எச். எஸ், ரூபசிங்கா இன்று காலை யாழ். கோட்டையில் யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு சீ. வீ, கே சிவஞானம் மற்றும் அரசாங்க திணைக்களத்தலைவர்கள், முகாமையாளர்கள் சந்திக்கவிருக்கிறார்

## யுத்தநிறுத்தம்

### இலங்கை அரசுக்கு இந்தியா தகவல்

(கொழும்பு)

ஈழதேசிய விடுதலைமுன்னணி தாம் போர்நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து விலகவில்லைஎன்றும் இன்னமும் தாம் கடைப்பிடித்துவருவதாகவும்இந்தியாவில் தெரிவித்துள்ளதாக இலங்கையிலுள்ள இந்தியத்தூதுவர் திரு ஜே என். டிக்ஸிற் நேற்று தெரிவித்தார்

இந்தியத்தூதுவர் நேற்று பத்திரிகையாளர் மகாநாடொன்றைக் கூட்டியிருந்தார்.

(8ம் பக்கம் பார்க்க)

### ● வசாவிளான் அருகே நேற்று சம்பவம்:

## கண்ணிவெடி, துப்பாக்கிச்சூடு!

## 4மணிநேரம் நீடித்த பதற்றம்!

(ஏ வி. மாணிக்கம்)

பலாலி இராணுவமுகாமிலிருந்து கவசவாகனங்கள, ட்ரக்குகள் சகிதம் பலாலி வீதி வழியாக யாழ்ப்பாணம் நோக்கி நடந்து வந்த இராணுவத்தினருக்கும் தீவிரவாதிகளுக்கு மிடையே ஏற்பட்ட உக்கிரமான மோதலினால் இராணுவத்தினர் மீண்டும் பலாலி முகாமை நோக்கித் திரும்பிச் செல்ல நேர்ந்தது.

நேற்றுக்காலை வசாவிளான் சந்திக்கும் செற்குப்புன்னலைக் கட்டுவன் சந்திக்குமிடையில் இம்மோதல் கடுமையாக இடம்பெற்றது.

இச்சம்பவத்தினால் இப்பகுதி மக்கள் வீடுகளைவிட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகுந்திருந்தனர்.

நேற்றுக் காலை 7 மணி தொடக்கம் நண்பகல் 11 மணி வரை மோதல் நீடித்தது.

இம்மோதல் இடபெற்ற இப்பகுதி நான்கு மணித்தியாலங்கள்வரை பெரும்பதற்ற நிலைக்குள்ளானது. இவ்வீதியில் போக்குவரத்துச் சேவை முற்

(5-ம் பக்கம் பார்க்க)

# ரூ. 5 லட்சம் நகை கொள்ளை'

## கண்டனம் தெரிவித்து மறியல் - வீதித்தடை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் உள்ள ராஜேந்திரா ஒழுங்கையில் உள்ள வேலைத் தளத்தில் சுமார் இருநூறு தங்கப் பவுண் நகைககளும், ரூபா பதினையாயிரம் ரொக்கபணமும் [சுமார் ஐந்து லட்சப் ரூபா] ஆயுதம் தாங்கிய கோஷ்டியினரால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது!

இதன் எதிரொலியாக நேற்றுக்காலை யாழ். நகைக் கடைகளை உள்ளடக்கிய பகுதி வீதிகள் யாவும் மரக்குற்றிகள்

(8-ம் பக்கம் பார்க்க)

LANKA CEMENT LIMITED
Kankesanturai

கற்குழியில் இருந்து கல்நொருக்கி இயந்திரத்திற்கு சுண்ணும்புக்கல் ஏற்றி இறக்குதல்.

கீரிமலைக்கு அருகாமையில் அமைந்துள்ள எமது கற்குழியில் இருந்து (Quarry) தொழிற்சாலையிலுள்ள எமது கல்நொருக்கி இயந்திரத்திற்கு (Crusher) சுண்ணும்புக்கற்களை ஏற்றி இறக்குவதற்காக ரிப்பர், லொறிகள் (Tipper, Lorris) டம்பர்கள் (Dumpers) தேவைப்படுகின்றன.

மேற்படி சேவைக்கு ரிப்பர், லொறிகள், டம்பர்கள் என்பனவற்றை சேவையில் ஈடுபடுத்த விரும்பும் வாகனச்சொந்தக்காரர்கள் அல்லது ஒப்பந்தக்காரர்கள் எமது தொழிற்சாலை முகாமையாளரை அவரது காரியாலயத்தில் சந்தித்து வாகனங்களைப் பரிசோதனைக்குட்படுத்தி (Inspection of vehicle) சேவையில் ஈடுபடுத்துவதற்கான ஒழுங்குகளைச்செய்யும்படி தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறோம்.

பொதுமுகாமையாளர்,
லங்கா சீமெந்து லிமிட்டெட்,
காங்கேசன்துறை.

(A 63)

### பருத்தித்துறை சம்பவம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நகரில் நேற்றுக்காலை இராணுவத்தினருக்கும் தீவிரவாதிகளுக்குமிடையே துப்பாக்கிச் சூட்டுச் சமர் இடம்பெற்றது: இம்மோதலில் இருதரப்பிலும் ஏற்பட்ட சேதவிபரம் பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

### நேற்றிரவு குண்டுவெடிப்பு

[யாழ்ப்பாணம்]

நாவற்குழி முகாமிலிருந்து நேற்றிரவு 7 மணியளவில் புறப்பட்ட இராணுவத்தினர் கண்டி வீதிவழியாக அரியாலை யாழ். வளைவை அண்மித்ததும் பலத்த குண்டுவெடிச்சத்தம் கேட்டது.

அதனைத் தொடர்ந்து அவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபடி மீண்டும் முகாமை நோக்கிச் சென்றனராம். (மா)

மங்களகரமான ஆரம்பம்

லிங் பார்மசி



இன்று மங்களகரமாக ஆரம்பித்துள்ளார்கள்

லிங்பார்சி சகல விதமான ஆங்கில மருந்து வகைகள், போஷாக்கு நிறைந்த பால்மா வகைகள், விற்றமின் ரொனிக்குகள் இன்னும் நீங்கள் தேடிடும் சகல விதமான ஆங்கில மருந்து வகைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

இன்று முதல் "லிங் பார்மசி"

அனுபவம் மிகுந்த மருந்துக்கலவையாளரின் நேரடிக்கவனிப்பில் சகல மருந்து வகைகளுக்கும்

"லிங்பார்மசி"யை

நாடுங்கள்

இல: 404/1, டில்கா கிறீம் கவுஸ் மேல்மாடி
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

C 229

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

Toyota Corrolla 'K E' 50, 12 Sri தொடர் விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு: சாந்தி ஜுவல்லர்ஸ், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C204)

ஆரம்ப விஞ்ஞானம்-ஆண்டு 4-13/- ஆண்டு 5-16/- ஆக்கம் பிரான்சிஸ் ஞானப்பொன்ருஜ். பதிப்பாளர்: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [C-112]

சாவகச்சேரியில் புகையிரத நிலையம், பஸ் நிலையம், பாடசாலை, தபாற்கந்தோர் ஆகியவற்றிற்கு கிட்டவாக நல்ல சுற்ருடலில் அமைந்த நல்ல தண்ணீர் உள்ள 3 பரப்பில் அமைந்த புதியவீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: 74, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம். (பெருமாள் கோவிலுக்கு அருகில்) [C 212]

## விற்பனைக்கு

National Panasonic டூஇன் வண் R. Q. 554 F. T. S ரூ 1750/- போட்டபிள் தட்டச்சு ரூ 1500/- மாலை 3-6 மணிவரை: ஸ்கந்தராசா. கனகரத்தினம் வீதி. வட்டுக்கோட்டை. [C 219]

2 பரப்புக் காணி புது அத்தியடி வீதி யாழ்ப்பாணம் என்னும் இடத்தில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: No 10/1, சிவன் கோவில் வீதி, திருநெல்வேலி. (C 209)

நல்ல நிலையில் உள்ள மொறிஸ்மைனர் கார் [இல; EN 4751] உரியவர் வெளிநாடு செல்லவிருப்பதால் விற்பனைக்கு உண்டு. குறைந்த அளவு பெற்ருேலுக்கு கூடிய மைல் வேலைசெய்யக்கூடியது. தொடர்பு: க. சிறீகாந்தன், மூளாய் ரேட், வட்டுக்கோட்டை. [C 208)

### விநியோகத்திற்காக
## பதிவு செய்தல்

கீழ்க்காணும் பொருட்களை தேசிய உப்புக் கூட்டுத்தாபனத்திற்கு 1986-ம் ஆண்டிற்கு விநியோகிப்பதற்கு அனுமதி பெற்ற வியாபார நிறுவனங்களிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. உங்களால் விநியோகிக்கக்கூடிய பொருட்களையும் அதன் விபரங்களையும் கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத்தபாலில் **1-2-1986இற்கு முன்பாக** அனுப்பிவைக்கவும்.

1. கட்டிடப் பொருட்கள்
2. மின்சார உபகரணங்கள்
3. வாகன உதிரிப்பாகங்கள்
4. கனரகப் பொருட்கள்
5. அச்சிடுதலும் காரியாலய உபகரணங்கள்
6. பொதுப் பொருட்கள்

பிராந்திய முகாமையாளர்,
பிராந்தியக்காரியாலயம்,
**தேசிய உப்புக் கூட்டுத்தாபனம்,**
ஆனையிறவு.

(ஏ 75)

★ பிரான்ஸ்
★ மேற்கு ஜெர்மனி

ஆகிய நாடுகளுக்கு உங்களை எமது பிரதிநிதி **JANUARY 28-ந் திகதி** அழைத்துச் செல்வார்.

மற்றும்

**பாஸ்போட், பொண்ட், விசா**

என்பவற்றுக்கும் தொடர்பு கொள்ளவும்.

## லிப்ருஸ் லிமிட்டெட்,

R. G.கட்டிடம்,
70, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

No 60, Sea Beach Road,
Pettah,
Tele, No. 29148

Note:

கொழும்பில் கொடுக்கும் பணத்தை யாழ்ப்பாணத்திலும் யாழ்ப்பாணத்தில் கொடுக்கும் பணத்தை கொழும்பிலும்பெற்றுக் கொள்ளக்கூடிய வசதிகள் செய்துகொடுக்கப் படும்.

(ஏ 71)

## விற்பனைக்கு

Bairaha Farms புருெயிலர் இறைச்சிக் குஞ்சுகள் 28ந்திகதி செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். (C 53)

## தேவை

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் வசிக்கும் G.C E. [O/L] படித்தவர், கந்தோர் உதவியாளராக தேவை. Jaffna Property Trades Ltd 3, Model Market [Upstairs], Jaffna. [A 81]

## சேவை

கொழும்புக்கு வருபவர்களுக்கு ஓர் நற்செய்தி. மீண்டும் உணவுடன் தங்குமிட வசதிகள் சகாய கட்டணத்தில் ஒழுங்கு செய்து கொடுக்கப் படும். வாக் இன் (Walkinn). 41/1, W. A Silva-Mawatha, வெள்ளவத்தை. [C 194)

T. V. றேடியோ, மோட்டர், ப.,ன், வீட்டு வயறிங் மற்றும் சகல மின்பாவனைகளும் திருத்திக் கொடுக்கப்படும். பாலன் எலற்றிக்கல், 18, இருபாலை ரேட், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். [C 210]

### சைவ சமய தீட்சை

தைப்பூச தினத்தன்று சமய தீட்சை வைக்கும் சமய ஸ்தாபனங்கள், தொண்டர் சபைகள், ஆலயங்கள். ஆறுமுக நாவவர் அருளிய சமய அனுட்டான விதியை தபால் செலவுடன் விண்ணப்பம் செய்து பெற்றுக்கொள்ளலாம்,

மில்க்வைற்,
யாழ்ப்பாணம்.

[A 74]

## காணவில்லை

நெடுந்தீவைச் சேர்ந்த 13 வயதுடைய ராணி என்பவரைக் காணவில்லை. கடைசியாக சண்டிலிப்பாயில் கடந்த ஞாயிறு பிற்பகல் 1 மணியளவில் காணப்பட்டுள்ளார். சிவப்புநிறச் சட்டை அணிந்திருந்தார். கட்டையாக வெட்டிய தலைமயிர். தகவல் தெரிந்தவர்கள் கவலையுற்றிருக்கும் சிறியதாயாருக்குத் தெரியப்படுத்துவதற்காக தயவுசெய்து உடனே தொடர்பு கொள்ளவும். விளம்பதாரர், M 29, மே/பா Dyn Ads, 476, பிரதான வீதி, சுண்டுக்குளி. [சென் ஜோன்ஸ் முன்பாக] [A 79]

### நியமனம்

(யாழ்ப்பாணம்)

சங்கானை பட்டின சபை அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. நா. குமாரசாமி வெளிநாடு பயணமானதைத் தொடர்ந்து அவரின் இடத்திற்கு மாதகல் பட்டின சபை அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. ந. குமாரசாமி இம் மாதம் முதல் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார் மாதகல் பட்டின சபையில் இவர் கடமையாற்றிய காலத்தில் பொது மக்களுக்கு ஆற்றிய சேவையை அப்பகுதி மக்கள் பாராட்டியுள்ளனர்.

(ச)

### இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**ஐ.செல்வசோதி**

[பொலிஸ் சார்ஜன் [illegible] யாழ்ப்பாணம்]

தோற்றம்
1933-07-16

மறைவு
1984-01-15

அன்பின் உருவே
அழகின் ஜோதியே
அமைதியின்
உறைவிடமே
உங்கள் நினைவுஎமக்கு
என்றும்
பசுமையாகவே
இருக்கும்.

அன்பு மனைவி,
அருமைக்
குழந்தைகள்,
உற்ருர், உறவினர்.

சுன்னுகம். [A40]

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

### முதலாண்டு நினைவஞ்சலி



ஜோன்பிள்ளை
அருளப்பு

படைப்பு—1937-08-27
பறிப்பு—1985-01-15

பொங்கல் பொங்கி
புசித்திருந்து,
ஓரிரவு கழிந்து கடை
சென்ற வேளை,
மிட்சுபிசியில் மிதந்து
வந்த
காக்கித் தேவதைகள்
—அங்கு
கட்டவிழ்த்து விட்டனரே
தம் காடைத்தனத்தை
பொழிந்த குண்டுகள்,
துளைத்த நெஞ்சு
மாறவில்லை, ஆறவில்லை,
ஓராண்டு சென்றும்
தமிழனுகப் பிறந்து தமிழ்
பேசிய குற்றத்திற்காக,
பலர் சிந்திய குருதியில்,
உங்கள் குருதியும்
சேர்ந்ததே என்று
எண்ணி ஆறுகிருேம்.
மனம் தேறுகிருேம்
அப்பா.

அன்னுரின் ஆத்ம
சாந்திக்காக பிரார்த்
திக்கும்
மனைவி, மக்கள்
யோகா, அருள்,
உற்ருர், உறவினர்கள்.

செட்டிகுளம்.
[C196]

# CLASSES

Spoken English classes for all grades- beginning Monday 20th at 3.00p.m.
Cookery Classes- Beginners and advanced Courses also finishing School for girls going abroad- crash course available.

(C218)

3, Rakka Lane,
Chundukuli.
Telephone: 23153.

### உரும்பராய் இந்துக்கல்லூரி
## பழைய மாணவர் சங்கம்

உரும்பராய் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க புனர் நிர்மாணக் கூட்டம் 18-1-86 சனிக்கிழமை பிற்பகல் 3-30 மணியளவில் நடைபெறும். பழைய மாணவர்கள் தவருது சமுகமளிக்கும்படி அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

அதிபர்.

(ஏ 213)

## கொடுக்கப்படும் வட்டி விகிதம்

ஒரு வருடம் 22% தொடக்கம் 24% வரை
ஆறு மாதங்கள் 18%

உங்கள் காணியை இலகுவாக வாங்கவும் விற்கவும் எங்களை நாடுங்கள்.

**Jaffna Property Trades Ltd.,**
3, நவீன சந்தை, (மேல்மாடி), யாழ்ப்பாணம்.

(ஏ 80)

உலகச் செய்திகள்

ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சி

# தென்யேமனில் மோதல்; வணிகக் கப்பல்கள் தீயினுல் சேதம்!

ஏடன், ஜன 15

**தென் யேமனில் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்ற ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியை யடுத்து பெரும்மோதல்கள் அங்கு தொடர்ந்துஇடம்பெற்று வருகின்றன. தெ.யேமன் துறைமுகம் பலத்த தாக்குதலுக்குள்ளாகியுள்ளது. இங்கு பல வணிகக் கப்பல்களும் தீப்பற்றி எரிவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

தென் யேமனில் கம்யூனிஸ அரசாங்கம் பதவி வகிக்கின்றது. சோவியத் சார்புடைய இந்த அரசாங்கத்தின் தலைவராக அலி நஸார் மொஹமட் விளங்குகிருர்.

இந்தக் கம்யூனிஸ அரசாங்கத்தில் ஏற்பட்ட பிளவுகளையடுத்தே இந்த அரசைக் கவிழ்க்கும் முயற்சி கடந்த திங்கட்கிழமை இடம் பெற்றது. இம்முயற்சி. முறியடிக்கப்பட்டுள்ளதாக தெ யேமன் அரசாங்கம் அறிவித்துள்ளது.ஆயினும் இங்கு தொடர்ந்து மோதல்கள் இடம் பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

தென். யேமன் இராணுவத்திலுள்ள அரச விரோத சக்திகள் ஜனதிபதியின் வாசஸ்தலத்தை டாங்கிகள் கொண்டு தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது

இம் மோதல்களில் தென். யேமன் துறைமுகமே பலத்த தாக்குதலுக்குள்ளாகியுள்ளது. இங்கு நங்கூரமிட்டிருந்த பல வணிகக் கப்பல்கள் தாக்குதலுக்குள்ளாகித் தீப் பிடித்துள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தென் யேமன், சோவியத்யூனியனின் முக்கியக் கேந்திரப் பகுதிகளில் ஒன்ருகும். இந்து சமுத்திரம், மற்றும் மத்திய கிழக்கு சம்பந்தப்பட்ட ராஜதந்திர நடவடிக்கைகளை இந் நாட்டிலிருந்தே சோவியத்யூனியன் பெருமளவில் மேற்கொண்டு வருகிறது.

தென் யேமனிலேயே சோவியத்யூனியனின் இந்து சமுத்திரப் பிராந்தியத்துக்கான பெரும் கடற்படைத் தளமும் காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (கி)

## இந்திய — ஈரான் புதிய ஒப்பந்தம்

(தெஹரான்)

இந்தியாவும் ஈரானும் பொருளாதார கலாசார துறைகளின் ஒத்துழைப்புக்கு வகைசெய்வதான புதியஒப்பந்தம் என்றில் கைச்சாத்திட்டுள்ளன.

இந்தியவெளியுறவு அமைச்சர் திரு. பி. ஆர். பஹத்தும் ஈரானிய வெளியுறவு அமைச்சர் டாக்டர் அலி அக்பர் டிலாயத்தியும் நேற்று முன்தினம் தெஹரானில் இந்திய — ஈரானிய கலப்புக் குழுக்களின் கூட்டத்தின் பின்னர் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இந்த ஒப்பந்தத்தின்படி வர்த்தகம், தொழிற்துறை, சிறு தொழிற்பிரிவுகள் ரயில்வே வேன்கள், துணி ஆலைத் தொழில் மற்றும் குறிப்பிட்ட ஒருசில கனரகத்தொழில் முதலியன இவற்றில் அடங்கும். (பி)

## இரகசிய பரிசோதனை

வாஷிங்டன், ஜன 16

1982ம் ஆண்டு முதல் 8 ம் ஆண்டுவரை அமெரிக்கா இரகசியமாக 19 அணுகுண்டுப் பரிசோதனைகளை நடத்தியுள்ளன.

இத்தகவலை அமெரிக்காவின் சூழல் பாதுகாப்பு இயக்கமொன்று தெரிவித்துள்ளது.

பாதுகாப்புக் காரணங்களுக்காகவும் தேசியநலன் கருதியும் இந்த இரகசிய பரிசோதனைகள் நடத்தப்பட்டதாகவும் கூறப்பட்டது. இதிலிருந்து தகவல் வெளியிட்ட மேற்படி சூழல் பாதுகாப்பு இயக்கம் இத்தகைய பரிசோதனைகள் அழிவுச்சக்தி கூடியவை என்றும் தெரிவித்தது. [கி]

## கப்பல்கள் சோதனை

லண்டன், ஜன 15

வளைகுடா மார்க்கமாகச் செல்லும் அமெரிக்க பிரித்தானிய கப்பல்கள் ஈரானிய கடற்படையால் பரிசோதிக்கப்படுகின்றன என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

இக்கப்பல்களில் ஈராக்கிற்கு ஆயுதங்கள் அனுப்பிவைக்கப்படலாம் என்று சந்தேகித்தே இவை சோதனைக்குள்ளாக்கப் பட்டுள்ளன என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஈரானின் இந்த சோதனை நடவடிக்கையை அமெரிக்கா, பிரிட்டன் ஆகியன வன்மையாகக் கண்டித்துள்ளன (கி)

## தென்னுபிரிக்க பிரச்னை: ஓர் 'இராஜதானி' உதவிகேட்கிறது!

லண்டன், ஜன 15

தென்னுபிரிக்க நாடான 'லொசோத்தோ' அத்தியாவசியப்பண்டங்கள் தனக்குக் கிடைப்பதில் தடங்கல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்திருப்பதுடன் அவற்றை விரைந்து அனுப்பிவைக்குமாறு பிரிட்டன், அமெரிக்கா ஆகியநாடுகளுக்கு அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

லெசோத்தோ ஒரு சிறிய நாடாகும். இது தென்னுபிரிக்க நாட்டினுள் ள, அந்தநாட்டினுலேயே முழுமையாகச் சூழப்பட்டிருப்பது ஒருகுறிப்பிடத்தக்க அம்சமாகும்.

லெசோத்தோ 'ஸுலூ' என்ற தென்னுபிரிக்க ஆதிவாசிகளின் ஓர் இராஜதானியாகும். இங்கு இன்றும் பழமையான அரசாட்சிமுறையிலேயே நிர்வாகம் நடக்கிறது. ஆயினும் மக்கள் நவீன காலவோட்டத்தில் டங்கெடுப்பவர்களாகவே இருக்கின்றனர்.

தென்னுபிரிக்க இனப்பூசல்கள் இச்சிறு நாட்டையும் பாத்திதுள்ளது தென்னுபிரிக்க கறுப்பின தீவிரவாதிகளான ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் காரர்களுக்கு லெசோத்தோ உதவியளிப்பதாக தென்னுபிரிக்கா தெரிவித்துள்ளது.

அதனையடுத்தே இந்நாட்டுக்கு எரிபொருள், உணவு மற்றும் மருத்துவப் பொருட்கள் தரைமார்க்கமாகச் செல்வதை தென்னுபிரிக்கப்படைகள் தடுத்து வருகின்றன என்றுலெசோத்தோ அரசு கூறியுள்ளது.

இதன் காரணமாகவே தனக்கு வேண்டிய அத்தியாவசிய உதவிகளை விமானமார்க்கமாக வழங்கும்படி அமெரிக்கா பிரிட்டன்ஆகியநாடுகளிடம்லெசோத்தோ வேண்டுகோள் விடுத்துள்ளது. [கி]

## தென்யேமனுக்கு லிபிய அமைதிப்படை - கடாபி அறிவிப்பு

லண்டன் ஜன, 15. அங்கு அனுப்ப முன்வந்துள் தெனயேமனில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை ஓர் அமைதிப்படையாகவே மையைச் சமாளிக்க லிபிய தமது இராணுவம் அங்குசெல் அதிபர் தமது இராணுவத்தை

6-ம் பக்கம் பார்க்க]

## திருவிழாவில் விபத்து: மே. வங்கத்தில் 23 பேர் மரணம்!

புதுடில்லி ஜன 15

மேற்கு வங்காளத்தில் கடந்த திங்கட்கிழமை நடந்த திருவிழாவொன்றில் கலந்து கொள்ளச் சென்றவர்களில் 23 பேர் இரு வேறு விபத்துக்களில் சிக்கி உயிரிழந்துள்ளனர்.

கங்கா சாகர் தீவில் திங்கட்கிழமை நடந்த மகர சங்கிராந்தி மேளா எனும் திருவிழாவைப் பார்க்க சென்றோர் இவ்வாறு இரு விபத்துக்களில் சிக்கி உயிரிழந் துள்ளவராவர்.

விழா நடந்த இடத்தில் மூண்ட தீயினுல் பெண்கள், குழந்தைகள் உட்பட பதினறு பேர் உயிரிழந்தனர். வேறு எட்டுப் பேர் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

அன்று நடந்த வேருெரு சம்பவத்தில் படகொன்றில் சென்றுகொண்டிந்த ஏழு பேர் அப் படகுகவிழ்ந்ததினுல் நீரில் மூழ்கியிறந்துள்ளனர். நூறு பேர் இப் படகில் சென்றனர் எனக் கூறப்படுகிறது. (செ)

# நவீனசவால்களை சமாளிக்க இந்திய ராணுவம் தயார்!

## -- தளபதி வைத்தியா!!

[புதுடில்லி]

''இந்தியாவுக்கு, எப்பாகத்திலிருந்து எவ்விதத்திலும் வரும் இராணுவ அச்சுறுத்தல்களை சமாளிக்கும் திறமை இந்திய இராணுவத்துக்கு உண்டு'' இவ்வாறு நேற்று புதுடில்லியில் நடைபெற்ற இந்திய இராணுவதின நிகழ்ச்சியில் உரையாற்றிய இராணுவத் தளபதி ஜெனரல் ஏ. எஸ். வைத்தியா தெரிவித்தார்.

சுமார் 1800 இராணுவ சிப்பாய்களினதும் அதிகாரிகளினதும் அணிவகுப்பை ஏற்றுக் கொண்டு உரையாற்றிய அவர் தொடர்ந்து பேசுகையில்: ''எவ்வித இராணுவ அச்சுறுத்தல்களையும் உறுதியுடன் முறியடிக்கும் வகையில் நவீன இராணுவ அமைப்பு எம்மிடம் உண்டு'' என்று கூறினர்.

இவ்வைபவத்தில் 48 இராணுவ அதிகாரிகளுக்கு விசேட விருதுகள் வழங்கப் பட்டன.

இராணுவ தினத்தை முன்னிட்டு ஜனதிபதி, உப-ஜனதிபதி, பிரதமமந்திரி மற்றும் மாநில முதமைச்சர்கள் ஆகியோர் இந்திய இராணுவத்திற்கு வாழ்த்துச் செய்திகளைஅனுப்பியிருந்தனர்.

ஜெனரல் வைத்தியா இவ் வருடம் ஓய்வு பெறுவதையடுத்துப் புதிய இராணுவத் தளபதியாக ஜெனரல கிருஷ்ணசாமி சுந்தர்ஜி என்ற தமிழர் நியமிக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (செ)

## இந்திய பீரங்கிப்படகில் கம்பியூட்டர்வசதி

(புதுடில்லி)

இந்திய ராணுவத்தின் பீரங்கிப்படகுகளில் கம்பியூட்டர்வசதிகள் பொருத்தப்படவுள்ளன.

பீரங்கி வசதி மற்றும் போர்க்கள முறைகளின் இயந்திர மயமாக்கத்திற்கான கம்பியூட்டர் தொழில் நுட்ப அறிவை உள்நாட்டிலேயே விருத்தி செய்வதறகான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பீரங்கிப் படைப்பயிற்சிக்கூடத்தின் அதிகாரி ஒருவர் பத்திரிகையாளர் மத்தியில் தெரிவித்தார். (பி)

## அமெரிக்க விண்வெளிஓடம்: கொலம்பியா வெற்றிகரப் பயணம்

(வாஷிங்டன்)

அமெரிக்க விண்வெளி ஓடம் 'கொலம்பியா' வெற்றிகரமாக விண்ணில் தனது பயணத்தை மேற்கொண்டுள்ளது.

சில தொழில் நுட்பப் பிரச்னைகள் காரணமாகவும் சீரற்ற காலநிலையினுலும் இதன் பயணம் ஆறு தடவைகள் தடைப்பட்டது.

இதில் சென்றுள்ள ஏழு உறுப்பினர் குழுவில் புளோரிடாவைச் சேர்ந்த அமெரிக்கப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் அடங்குவார்.

கொலம்பியா விண்வெளி ஓடத்தின் ஐந்து நாள் பயணத்தின் போது; பூமியைச்சுற்றிய பாதையில் தகவல் தொடர்பு செயற்கைக் கோள் ஒன்றை வைப்பதுடன் ஹேலிஸ் வால் வெள்ளியின் ஆய்வு உட்பட பல விஞ்ஞான ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளது. (பி)

## பஞ்சாபில்விரிவான மொழி ஆய்வு!

சண்டிகார் ஜன 15

பஞ்சாபிலுள்ள பட்டில்கர் பிரதேசத்தில் மொழி ஆய்வு ஒன்றை இந்திய மத்திய அரசு பரந்த அளவில் நடத்துகிறது.

இப் பிரதேசத்திலுள்ள 54 கிராமங்களிலேயே இந்தஆய்வு நடத்தப்படுகிறது. இப் பிராந்திய மக்களின் தாய் மொழி பற்றிய கருத்துக்கள், பேச்சு வழக்கு பற்றிய விடயங்கள் இவ் ஆய்வில் இடம் பெறுகிறன

மொழி ஆய்வுகளை நடத்த அமைக்கப்பட்ட நீதிபதி மத்தியு கமிஷனின் சிபார்சின் பேரிலேயே இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

இந்த ஆய்வை மேற்கொள்

(6-ம் பக்கம் பார்க்க)

## மணிவாக்கு

அன்னையிலாச் சேய்போல் அலக்கணுற்றேன் கண்ணுரை,
எண்ணகத்தில் தாய்போல் இருக்கும் பராபரமே.

— தாயுமானவர்

# நமது நோக்கு

## யுத்த நிறுத்தம் இரண்டு

"கொலைகாரர் அனைவரும் தூக்குத் தண்டனையைக் காத்திருக்கும் வரைக்கும் போதகர்களாக மாறுகின்றனர்'' என்ஞெரு இத்தாலிய பழமொழி உண்டு. 'தமிழ்ப்போராளிகள் அனைவரும் கொலைகாரரே; அவர்களுடன் அரசாங்கத்துக்கு என்ன பேச்சுவார்த்தை?' என்று இந்தோனேஷிய தூதுவர் பாதுகாப்பு அமைச்சருக்கு அளித்த பேட்டியில் கூறியிருக்கிறுர்.

இந்தோனேஷியாஒருசிறப்பான நாடு. செல்வம் கொழிக்கும் வளம்பெற்ற நாட்டில் மக்கள் வறுமையில் வாடுகின்றனர். பருவமறியாத காலத்தில், இலங்ங்கையைப் போல ஒரு சோஷலிச ஆட்சியில் பரீட்சித்து தோல்விகண்டு அதன் விளைவால் சுத்த முதலாளித்துவ ஆட்சியில் சிக்குண்டு தவிக்கிறது இந்தோனேஷியா. எனவே தூதருக்கு இதனைவிட அவசிய வேலைகள் அதிகம் உண்டு.

தமிழ்ப் போராளிகள் இதுகாறும் போதகர்களாகக் காணப்படவில்லை. போரிலே காலம் கழிக்கின்றனர்; தோல்வி கண்டபோதெல்லாம் மடிகின்றனர்; தம்மையே கொல்கின்றனர். எனவே தூக்கு மேடைக்குக் காத்திருக்கும் சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிட்டாது. ஆயுதப்போர் என்றுல் எதிரியைக் கொல்வது உட்பட எவ்வித சூழ்ச்சிகளாலும் எதிரியை முறியடிப்பதே முக்கிய நோக்கம்.

தமிழ்மக்களைப் போராளிகளிலிருந்து] பிரித்துப் பார்க்கும் எந்த நடவடிக்கைகளும் இலகுவில் கைகூடா. இதனை நாம் போர் நிறுத்தம் பிசுபிசுத்திருக்கும் இவ்வேளையில் மிக உறுதியாக வற்புறுத்த வேண்டியிருக்கிறது.

எட்டு மாதத்துக்குமுன் தொடங்கிய யுத்தநிறுத்தம் வடக்கிலும் குறிப்பாகக் கிழக்கிலும் மீறப்பட்டது,

இதற்கு யார் பொறுப்பு என்பதை யாரிடமிருந்து அறியலாம்.

கண்காணிப்புக்குழு செவ்வனே செயற்பட அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் ஏதாவது உதவியதா?

ஏற்கெனவே நியமனம் பெற்ற மூன்று அங்கத்தவர்கள் மிகத் தகுதிவாய்ந்தவர்களென்பதை எவரும் ஒத்துக் கொள்ளுவர்.

போராளிகளுக்கு அனுதாபமான, அதேசமயம் அரசாங்கத்தின் அனுமதி பெறக்கூடிய இருவர் சேர்த்துக் கொண்டபோது அரசாங்கம் என்ன செய்தது?

சாப்பாடு தட்டுப்படும் நேரத்தில் விருந்தினர் எதிர்பாராத நிலையில் வந்துவிட்டால் 'சொதி, குளம்பு தானும்' நீரின் உதவியோடு தக்கவாறு அதிகரிக்கப்படுவது சில சந்தர்ப்பங்களில் நடைபெறும் செயல்.

அதேபோல மூன்றில் ஆரம்பமான கண்காணிப்புக்குழு இரண்டு தமிழர் நியமிக்கப்பட்டதும், அது பதிஞென்ருகப் பெருகியது; நடப்பதெல்லாம் நன்மைக்கே என்ற போக்கில் நாம் இதனைக் கண்டித்துக் குழப்புவது தர்மம் அல்ல என்று அன்று நினைத்தோம்.

இன்று தமிழ்ப் போராளிகள் பேரில் நியமனம்பெற்ற இருவரும் இராஜினுமாச் செய்திருக்கின்றனர். அது தகுமா இல்லையா என்பதை யாழ்ப்பாணத்தில் வாழும் நாம், நன்கறிவோம். தமிழ்ப் போராளிகளே யுத்த நிறுத்தத்தை மீறினவர்களென்றுல், அவர்களை அரசு அடக்க முடியவில்லையென்பது தெளிவாகிறது.

பத்திரிகைகளிலும் வானெலியிலும் 'பயங்கரவாதிகள்' கொல்லப்படுவதும் அவர்களுடைய முகாம்களும் நவீன ஆயுதங்களும் கைப்பற்றப்படுவதும் மிகப் பைம்பலாகக் கூறப்பட்டு வந்தது.

இது உண்மையாஞல் யுத்த நிறுத்தம் — இரண்டாம் பாகம் அவசியமில்லாது போய்விடும்; இந்த முரண்பாட்டைச் சற்றேனும் மதியாத பாதுகாப்பு அமைச்சர், இலங்கைக்கு — இலங்கை அரசுக்கு யுத்த நிறுத்தம் அவசியமென்பதை உணர்கின்றுர்.

தோல்வியில் உண்டான ஆத்திரமே, "ஆயுதங்களை கீழே போடுங்கள் ராணுவத்தை முகாமில் வைத்துப் பூட்டுகிறேம்'' என்று சொல்ல வைக்கிறது. ராணுவம் வீட்டுக்குத் திரும்புவதே மிக உசிதமானது.

தமிழ்மக்களின் உணர்வை ஓரளவிற்கு அறிந்த நாம், போராளிகளைக் கணித்து நடைபெருத எந்தத் தீர்வும் நாட்டின் அமைதிக்குதவாது என்று திடமாகச் சொல்கிறேம்.

ஆர்குற்றியும் யுத்த நிறுத்தம் என்ற அரிசி பொங்கல் கழிந்தாலும் நாட்டுக்கு அவசியம்.

பிரார்த்தனையால், அல்லது அதனைப் பின்போடுவதால், அல்லது வாபஸ் பெறுவதால், அசுவமேத யாகத்தால், போராளிகளின் மனமாற்றத்தால், அரசின் ஆயுதபலத்தால், எவ்வாற்றுலும் யுத்த நிறுத்தம் இரண்டாம்பாகம் அவசியம்.

மாதஇறுதியில் இங்கு வரும்இந்திய வெளிவிவகார அமைச்சர் ரெமேஸ் பண்டாரியின் தூண்டுதலால் உருவான கண்காணிப்புக் குழு வெறிச்சோடிய நிலையில்இன்ஞெரு முயற்சிஅவசியம். போர் நிறுத்திய பின்னரே பேச்சு வலிவுறும்.

யாழ். மாநகரசபை புதிய செயலகம்

## தனி நபர்முடிவோ, ஆராயாமல் எடுத்த முடிவோ அன்று!

யாழ்ப்பாண மாநகர சபை புதிய செயலகம் நல்லூர் இராஜதானியில் அமைப்பது என்பது ஒரு தனி நபரின் முடிவோ, அல்லது நன்ருக அலசி ஆராயாது சடுதியாக எடுக்கப்பட்ட தீர்மானமோ அல்ல, இது கட்டிடக் கலைஞர்கள், பொறியியலாளர்கள், மாநகர சபை உயர் அலுவலர்கள் ஆகியோரால் பல முறை ஆராயப்பட்டு எடுக்கப்பட்ட ஒரு சிறந்த முடிவாகும் அத்துடன் இப்படியான ஒரு செயலகம் ஒரு மாநகரைப் பொறுத்தவரை மிகவும் அத்தியாவசியமானதாகவும், பொது மக்களுடன் மிகவும் நெருங்கிய தொடர்புடைய ஒரு முக்கிய அலுவலகமாகவும், தற்போது நான்கு வேறுபட்ட இடங்களில் செயல்படுவதாலும், இதஞல் பொது மக்களுக்கும். சபை உத்தியோகத்தர்களுக்கும் ஏற்படும் சிரமங்களையும் கருத்திற்கொண்டு இச் செயலகம் யாழ் மாநகரைப் பொறுத்தவரை உடனடியாக அமைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் அவசியமென்பது வலியுறுத்தப்பட்டது.

பழைய செயலகம் அமைக்கப்பட்டிருந்த இடத்தில் புதிய செயலகம் அமைக்கப்படலாமா என்பது முதலில் கட்டடச் கலைஞர்கள், பொறியலாளர்கள். மாநகரசபை உயர் அலுவலர்கள் ஆகியோரால் மிகவும் நுணுக்கமாக ஆராயப்பட்டது. பழைய இடம் பல வழிகளிலும் புதிய செயலகம் அமைக்கப்படுவதற்கு தகுந்த இடமாகக் காணப்படவில்லை. அப்படி அங்கு செயலகம் அமைப்பதாயின் அது ஒரு பல மாடிக் கட்டிடமாகவே அமைய வேண்டும். ஆஞல் அது சாத்தியமானதொன்றல்ல. அத்துடன் இப்படியான ஒரு செயலகம் அமைப்பதாயின் அது மூன்று மாடிகளுக்கு மேல் இருக்கக்கூடாது எனவும், எதிர்கால விஸ்தரிப்புக்கள் [Future Expansion] கட்டாயம் கருத்திற் கொள்ளப்படவேண்டும் எனவும், இடத்தின் விஸ்தீரணம் எதிர்கால விஸ்தரிப்புக்களுக்கு ஏற்ற வகையில் விசாலமானதாக இருக்க வேண்டும் எனவும், போக்குவரத்து வசதிகளை மேலும் விஸ்தரிக்கக் கூடிய வகையிலான ஒரு இடத்தில் அது அமைதல் வேண்டும் எனவும் கருதப்பட்டது.

இதன் முதற்படியாக இதற்குத் தகுந்த இடம் ஒன்று தெரிவு செய்யப்பட்ட வேண்டியது அவசியமாயிற்று இப்படியான ஒரு பெரிய செயலகம் அமைப்பதற்கு யாழ் மாநகர எல்லைக்குள் ஒரு தகுந்த இடத்தை தெரிவு செய்வதென்பதுஒருசாதாரண விடயமல்ல. அப்படியிருந்தும் யாழ்ப்பாண மாநகர ஆணையாளரின் திறமையாலும், சாதுரியத்தாலும், யாழ்-பருத்தித்துறை வீதியில் 10 ஏக்கர் நிலப்பரப்புடைய ஒரு இடம் தெரிவு செய்யப்பட்டது. இந்த இடம் எல்லா வகையாலும் மிகவும் பொருத்தமானது என்றும், இப்படியான ஒரு தகுந்த விஸ்தீரணமான இடம் யாழ்மாநகர சபை எல்லைக்குள் தெரிவு செய்வது என்பது இயலாத காரியம் எனவும் கட்டிடக் கலைஞர்கள், பொறியலாளர்கள், மாநார சபை உயர் அலுவலர்கள் ஆகியோரால் கருதப்பட்டது. அத்துடன் பழைய மாநகர சபை அலுவலகத்திலும் பார்க்க மிகச் சிறந்த போக்குவரத்து வசதிகள் புதிய செயலகம் அமையவுள்ள இடத்திற்கு ஒரு சுற்று வட்டம் Ring Service] போக்குவரத்துச் சேவையை அறிமுகம் செய்வதன் மூலம் நிவர்த்தி செய்ய முடியும் என்றும் கருதப்பட்டது. இப்படியாகப் பல வழிகளிலும், பலராலும், பல கோணங்களில், பல இன்னல்களுக்கு மத்தியில் ஆராயப்பட்ட பின்பே இந்த இடம் புதிய செயலகம் அமைப்பதற்காக தெரிவு செய்யப்பட்டது.

இதன் பின்னரே புதிய செயலகத்திற்கான மாதிரிப் படம் கட்டடக் கலைஞர் சி. குணசிங்கம் அவர்களால் மிகவும் திறம்பட, மிகக் குறுகிய காலத்தில் மிக அழகாக, எல்லாவித வசதிகளுடனும், மாநகர அலுவலகங்கள் எல்லாவற்றையும் உள்ளடக்கியதாக, மூன்று மாடிகளைக் கொண்டதாக திராவிடக் கட்டிடக் கலையைப் பிரதிபலிப்பதாக தயாரிக்கப்பட்டது. அத்துடன் இதற்கான மாதிரி உருவம் மிக அழகாக தயாரிக்கப்பட்டு பார்வைக்காக மாநகர சபை இந்து விடுதியில் வைக்கப்பட்டுள்ளது.

வை. அருட்செல்வன்,
கட்டடக் கலைஞர்,
மாநகர சபை'
யாழ்ப்பாணம்.

# மக்கள் கருத்து

## இப்பொழுது என்ன அவசரம்?

குழம்பிய தண்ணீரில் மீன் பிடிப்பது என்பது ஒரு ஆங்கிலப் பழமொழி. அதற்கு ஒப்ப சில தமிழர்கள் குழம்பிய தண்ணீரில் இப்போ மீன் பிடிக்க முயலுகின்றுர்கள். இப்படியான குழம்பிய கொந்தளிப்பான நேரத்தில், செயலகத்துக்கு என்ன அவசரம்? இது மக்களால் தீர்மானிக்கப்பட வேண்டிய விடயம் அரசாங்க வேதனம் பெறும் ஆணையாளராலும், அவருக்குக் கீழ் வேலைபார்ப்பவர்களும் தீர்மானிக்கும் விஷயம் அல்ல.

ஆணையாளரின் விளக்கப்படி பழைய தற்போது இழந்த மாநகரசபைக் கட்டிடத்தைதையும், நூல்நிலையம், பூங்கா பகுதிகளையும், அரச பாதுகாப்புப் படையினருக்குத் தாரை வார்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளதா?

யூவனேஸ் தங்கரட்ணம்
யாழ்ப்பாணம்

## "மக்கள் அல்லது பிரதிநிதிகளே தீர்மானிக்கவேண்டும்''

யாழ். மாநகர சபையின் புதிய மாதிரி கட்டிட அமைப்பு இலங்கைப் பாராளுமன்ற கட்டிடத்தின் வடிவமைப்பினை ஒத்திருக்கின்றது. இதன் வெளித்தோற்றமும் பாராளுமன்றக்கட்டிடத்தின் வெளித்தோற்றமும்ஒன்ருகவேகாணப்படுகின்றன.

இதன் கூரையின்அமைப்பும் சிங்கள கலாச்சாரத்திற்கமைய வடிவமைக்கப்பட்டது போன்று தோற்றம் அளிக்கின்றது. பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டதுபோன்றுஇக்கட்டிட மாதிரியமைப்பு திராவிட கட்டிடக்கலையினைப் பிரதிபலிப்பதாய் அமையவில்லை. யாழ் மாநகர சபையிஞல் முன்பு நிர்மாணிக்கப்பட்ட யாழ். நவீனசந்தை முதலாம் கட்ட கட்டிடம், நூல் நிலையம், யாழ். திறந்தவெளியரங்கு, நாவற்குளியில் அமைந்துள்ள வரவேற்புத் தூண்கள் ஆகியவை திராவிடக்கலையை பிரதிபலிக்கின்றன. கலை அம்சம் பொருந்தியதூண்கள் திராவிட கட்டிடக்கலைக்கு உயிர் ஊட்டுபவையாக அமைந்துள்ளன. இது,மாதிரிமமைப்பில் அறவே காணப்படவில்லை. சங்கிலிய மன்னனின் இராசதானியாகிய சங்கிலியன் தோப்பில் சிங்கள கலாசார வடிவமைப்பினை ஒத்த கட்டிடங்கலையுடன் கூடிய கட்டிடம்அமைக்கப்பட வேண்டுமா?

இக்கட்டிட அமைப்பினைப் பார்த்தால் கட்டிடத்தில்நடைபாதைகள் கட்டிடத்தின்கால் பகுதிக்கு மேலாக இருக்கின்றது. முற்பக்கத்தினையும் பிற் பக்கத்தினையும் இணைக்க அகலமான நீண்ட மூன்று நடைபாதைகள் அவசியம் தாஞ? மத்தியிலுள்ள நடைபாதையின் கீழ்ப்பக்கம் நீர்த் தடாகத்திஞல் பயன் படுத்த முடியாதுள்ளது. கட்டிடத்தின் பின்பகுதி முழுவதும் கார் நிறுத்துவதற்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டுள்ளது. இவ்வளவு பணக்செலவில் கார் நிறுத்துமிடம் தேவைதாஞ? இதனைப்பயன்படுத்த முடியாத நடைபாதைகளின் கீழ் விடுவதற்கு முடியாதா. ஐந்து மாடிகளைக்கொண்டதாக அமைந்திருந்தால் ஒவ்வொரு மாடியிலும் ஒவ்வொரு பகுதியாக பிரிவுகளை அமைக்க முடியும். தேவைக்கு மேல் நடைபாதைகளும், காரியாலய வசதிகள் குறைவாக உள்ளதும், சிங்களக்கலாச்சார அமைப்பினையும் ஒத்ததாகவுள்ள இவ் மாதிரியமைப்பு மறுசீரமைக்கப்பட வேண்டும்.

பலகோடி மதிப்புடைய கட்டிடத்தினை ரூபா பத்துலட்சத்தினை ஆரம்பசெலவாகக் கொண்டு ஆரம்பிக்க முயற்சிப்பதினை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. நாட்டின் நிலைமை சீரடைந்த பின்பு இதனை ஆரம்பித்தால் வைளிநாட்டின் உதவிகளைக்கொண்டு நிதிநெருக்கடியின்றி குறுகிய காலத்தில் கட்டி முடிக்க முடியும். யாழ் மாநகர சபை முன்பு நிர்மாணிக்கத்தொடங்கிய கட்டிடங்களைப் பற்றிப் பார்த்தால் யாழ் நவீன சந்தைக்கட்டிடம் கடந்த 15 வருடங்களாக இரண்டு பகுதிகள் மட்டுமே கட்டப்பட்டுள்ளது. மூன்றும்பகுதி ஆரம்பிக்கப் படவே இல்லை. நூல் நிலையம் பலவருடங்களாகியும் கட்டி முடிக்கப்படவில்லை. இந் நிலையில் சபைக்கட்டிடமும் பல வருடங்கள் செல்லக்கூடும். இதற்கு ஏற்படும் தடைக்குப் பல காரணங்களைக் கூறமுடியும். கட்டி முடிக்க முடியுமா?

யாழ் மாநகரசபைக் கட்டிடம் யாழ் நகரில் அமைக்கப்படவேண்டுமே அன்றி நல்லூரிலல்ல. காலப்போக்கில் யாழ் நகரசபைப் பகுதிபிரிக்கப்பட்டு நல்லூர் வேறு யாழ்ப்பாணம் வேறு ஆக ஆக்கப்படும் போது நல்லூரில் சிறந்ததோர் கட்டிடத்தினை அமைக்கலாம். தற்போது அமையும் கட்டிடம் யாழ் மாநகரசபைக்குரியது. இது யாழ் நகரில் தான் அமைக்கப்படல் வேண்டும்.

மாநகரசபை மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யுமிடமாகும் இது அமைய இருக்குமிடத்தினை நேரடியாக மக்கள் அல்லது மக்களிஞல் தெரிவுசெய்யப்படும் பிரதிநிதிகள்தான் தீர்மானிக்க வேண்டும். அதிகாரிகள் அல்ல. அதிகாரிகள் தெரிவு செய்து யாழ், கோட்டையில் கட்டப்பட்ட யாழ் கூட் நீதிமன்றக் கட்டிடம் அதனைப் பயன்படுத்தும் சட்டத்தரணிகள் தெரிவுசெய்யப்பட்ட இடம் திருப்தியாக இல்லையென எதிர்ப்புத் தெரி

(5-ம் பக்கம் பார்க்க)

## மூளைக்காய்ச்சலுக்கு
# சிறுமி பலி!

[யாழ்ப்பாணம்]

மூளைக்காய்ச்சலுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சிறுமி பலியானர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குமாரசாமி வதனி[9 வயது) என்பவரே இவ்வாறு யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுமரணமானவராவர். மரணவிசாரணை நடத்திய மரண விசாரணை அதிகாரி இயற்கை மரணமெனத் தீர்ப்பளித்தார்.

[ச]

## மக்கள்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வித்தமையால் இடைநடுவில் கைவிடப்பட்டமையினை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தற்போதைய சூழ்நிலையில் இக்கட்டடம் சம்பந்மான சகலவிடயங்களையும் விசாரிக்க ஓர்குழுவினைத் தெரிவு செய்து அவர்கள் மக்களின் குறைபாடுகள் யாவற்றையும் கேட்டு அதன்படி தெரிவிக்கும் கருத்துக்கமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் அல்லது இதனைக்குறுகிய காலத்தினுள் நிறைவேற்றக்கூடிய நிதிவசதிகள், சூழ்நிலைகள்யாவும் வரும்வரை பிற்போடுமாறு சம்பந்தப்பட்ட சகலரையும் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எம். திருச்செல்வம்,
கட்டிடத்திணைக்களம்.

## கடைசி நேர வரிவிளம்பரம்


### தவறிவிட்டது

இல. 552731123 V மா.சிவசூரியன் இணுவில் மேற்கு இணுவில் என்பவருடைய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

C 226

K. ஸ்ரீநாகரூபன் என்பவருடைய 642162020 V இலக்கமுடைய அடையாள அட்டை 7-1-86இல் கொக்குவிலுக்கும் ரொட்டியார்அடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்யாழ்ப்பாணத்திலுள்ள ஆயுர்வேதக் கல்லூரியில் ஒப்படைக்கவும்.

C 223

எம்பயர்
7 அடித்திரையில்
10-30, 2-30, 6-30,
பாக்கியராஜ்—ராதிகா
பொய் சாட்சி

லிடோ சினிமா
10-30, 2-30, 4-30, 6-30
நாகேஷ் - விஜயலதா -
M.M.R.வாசு
ஹலோ பாட்னர்

வெலிங்டன்
10-30, 2-30, 6-30
M. G. R.—லதா
நடித்த
நீதிக்கு தலைவணங்கு
[புதிய பிரதி]

உஷா மினி
10-30, 2-30, 4-45, 6-45
Terence Hill...
Bud Spencer... in
Go For it
யாழ் நகரில் திரைக்கு
வராத புதிய படம்.


# வசாவிளான் அருகே...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ருக ஸ்தம்பிதமடைந்திருந்தது.

தரையிலிருந்தும், வானத்திலிருந்து ஹெலிகொப்டர் மூலமும் துப்பாக்கி வெடிச் சத்தங்களும் இடையிடையே பயங்கரக்குண்டுகள் வெடித்த சத்தமும் இப்பகுதிகளில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு அச்செழுவைச் சேர்ந்த மயிலுகந்தையா [55-வயது] என்பவர் பலியானர். இவர் தெற்குப் புன்னலைக்கட்டுவன் சந்தியில் நின்ற பொழுதே இக்கதி நேர்ந்தது. மற்றும் 11பேர் காயமுற்று ஆஸ்பத்திரியிலும் தனியார் வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இராணுவதரப்பில் ஒருவர் பலியானதாகவும் இருவர்காயமடைந்ததாகவும் அரசுதரப்பில் தெரிவிக்கப்பட்டது.

பலாலி முகாமிலிருந்து புறப்பட்ட இராணுவத்தினர் வசாவிளான் மாவித்தியாலயத்துக்கண்மையில் வந்துகொண்டிருந்தபொழுது பயங்சர சத்தத்துடன் ஒருகுண்டு வெடித்தது. இக்குண்டு வெடிப்புச் சம்பவத்தில் இராணுவ தரப்பில் பலத்த சேதமேற்பட்டிருக்கலாமெனத் தெரியவருகிறது.

இக்குண்டு வெடிப்புக்குப் பின்னர் ஆயக்கடவைப் பிள்ளையார் கோவில்முன்றலில்ஹெலிகொப்டர் ஒன்று தரைஇறங்கி நடந்துவந்த இராணுவத்தினர் குறிப்பிட்டளவுபேரை ஏற்றிக் கொண்டு முகாமுக்குச்சென்றதாக தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்தும் இராணுவத்தினர் நடந்துவந்தபோது வடக்குப்புன்னலைக் கட்டுவனிலுள்ள பஸ்தரிப்பு நிலையத்துக் கண்மையில் வீதயில் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடியை மீட்டனர். இதன் பின்னர் தெற்குப்புன்னலைக் கட்டுவனுக்கு அண்மையில் வெடித்த கண்ணி வெடியில், சிலருக்கு காயமேற்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

நண்பகல் 10 மணியளவில் தெற்குப புன்னலைககட்டுவன் சந்தியிலிருந்து திரும்பி மீண்டும் பலாலி நோக்கி இராணுவத்தினர் சென்ற பொழுது வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்துக்கு அண்மையில் இடம்பெற்ற கண்ணி வெடியில் கவசவாகனம் ஒன்றுக்கு சிறுசேதம் ஏற்பட்டிருக்கலாம் எனத்தெரிவிக்கப்படுகிறது.

இம்மோதலின்போது வானத்திலிருந்துதாழப்பறந்து துப்பாக்கிப்பிரயோகம் செய்துகொண்டிருந்த ஹெலிகொப்டரை நோக்கி தீவிரவாதிகள் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததைத்தொடர்ந்து சேதமெதுவுமின்றி அது வானத்தில் உயரப்பறக்கத் தொடங்கியது.

வடக்குப் புன்னலைக்கட்டுவனுக்கும் தெற்குப் புன்னலைக் கட்டுவனுக்குமிடையிலுள்ள வீதியின் இருமருங்குமுள்ள பல வீடுகளின் மதில்கள், கவசவண்டியால் இடித்து வீழ்த்தப்பட்டிருந்தன.

சில வீடுகளுக்குள் இருந்த விலை உயர்ந்த பலபொருட்கள் சேதப்படுத்தப்பட்டன. ஒரு வீடுதீவைத்துஎரிக்கப்பட்டது.


நியூ விக்ரேஸ்
புதிய
வீடியோபட வெளியீடுகள்
★ மிஸ்டர் பாரத்
ரஜனிகாந், அம்பிகா, சத்யராஜ், கவுண்டமணி
நியூ விக்ரேஸ் எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்
யாழ்ப்பாணம். தொலைபேசி: 23532
A-84

இணுவில் வீடியோ சென்ரர்
ஸ்தாபனத்தரின் நற்செய்தி
★ பழைய புதிய தமிழ் ஆங்கில ஹிந்தி பாடல்களை இசை தட்டுகளில் இருந்து நேரடியாக ஒலிப்பதிவு செய்வதற்கும்,
★ பழைய புதிய தமிழ் ஆங்கில ஹிந்தி வீடியோ படப் பிரதிகளை வாடகைக்கு பெற்றுக்கொள்ளவும்,
★ உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கள வைபவங்களையும் கலை, கலாச்சார நிகழ்ச்சிகளையும் அதிநவீன வீடியோ கமராக்கள் மூலம் படம் பிடித்துக் கொள்ள நாடுங்கள்,
இணுவில் வீடியோ சென்ரர்
K. K. S. வீதி, இணுவில்.
C 224

எமது புதிய வெளியீடுகள்
பாணுசந்தர், சத்யராஜ், நடித்த
மணிவண்ணனின்
I சுயரூபம் [தரமான பிரதிகள்]
ரஜனியின் சிறந்த நடிப்பில் உருவாகிய
II மிஸ்டர் பாரத் [தரமான பிரதிகள்]
இன்னும்பல ஆங்கில வெளியீடுகள்
வெளியாகியுள்ளன.
வீடியோ பிரசாத்,
232, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(A 83)


## விதவைகள் புனர்வாழ்வுத்திட்டம்

1983ம் ஆண்டிற்கு பிறகு ஏற்பட்ட கலவரங்களில் தங்கள் குடும்பத் தலைவனை இழந்து நிர்க்கதிக்குள்ளான குடும்பங்களுக்கு புனர்வாழ்வுத் திட்டம் கிளிநொச்சி மாவட்டத்தில் குடும்ப அங்கத்தவர்களின் அடிப்படையில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

★ குடியிருப்புக் காணி ★ குடியிருக்கவீடு
★ பொருளாதார மேம்பாட்டுக்கான கால்நடை வளர்ப்பு முதலியவை புனர்வாழ்வு அம்சங்களில் முக்கியமானதாகும். காணி, வீடு இல்லாதோர்க்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

விண்ணப்பங்கள். 31- 01-86ம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும். பொது ஸ்தாபனங்களும் பங்குபெறலாம். முகவரி:

வெளிக்கள இயக்குனர்,
யாழ். சர்வோதய மாவட்டநிலையம்,
22, இராசாவின் தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம்.

[C 227]

## 31ம் நாள் நினைவஞ்சலி



திரு. சண்முகம் சோமசுந்தரம்

மலர்வு: 29-5-1930
உதிர்வு: 17-1-1986
திதி: 17-1-1986

வவனியா புகையிரத விடுதியில் வசித்தவரும் புகையிரத சேவையில் செக்கராக கடமை புரிந்து ஓய்வுபெற்றவருமான திரு. சண்முகம் சோமசுந்தரம் அவர்களின் 31ம் நாள் அந்தியேட்டி கிரியைகள் எதிர்வரும் 17-01-1986ம்திகதி அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும். உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரையும் இக்கிரியைகளில் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
சகோதரர், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

சோ. சுந்தரராஜன்,
புகையிரதவிடுதி,
வவனியா. (C 221)

## நாடற்றவர் —

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வழங்கப்பட்டுள்ளதாகவும், இலங்கையில் நாடற்றவர்கள்கள் என்னும் பிரச்னையை முற்ருக தீர்ப்பதற்கான சட்டமூலம் கொண்டுவரப்படும் நாளிலிருந்துமோதக் காலத்துக்குள் எஞ்சியுள்ள84 ஆயிரத்து 793 பேருக்கும் இந்தியப்பிரஜா உரிமை வழங்கப்படும் என்றும் இந்தியஅரசு அறிவித்துள்ளது.

நாடற்றவர் பிரச்னையை ஒரு முடிவுக்கு கொண்டுவர இலங்கை அரசு இணக்கம் தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து தோட்டத்தொழிலாளர்களின் பிரார்த்தனை இயக்கம் நேற்றுடன் முடிவுக்குகொண்டு வரப்பட்டதுடன்இந்தபிரார்த்தனை இயக்கத்தை முற்றும் முழுதாக கைவிட்டு விட்டதாக இ, தொ. கா. அறிவித்துள்ளது.

இதேவேளை இந்தப் பிரச்னையை ஒரு முடிவுக்குகொண்டு வந்த இந்திய-இலங்கை அரசுகளுக்கு இ. தொ. கா. தனது நன்றியைத் தெரிவித்துள்ளது.


FURTHER EDUCATION PROGRAMMING
OF
UDUVIL GIRLS' GOLLEGE

A full time Course in

COMPUTER PROGRAMMING & DATA PROCESSING

Duration 4 Months

The Modules to be Covered

I. Introduction and Logic Flowcharts. II. Gates Theory and lgorithms. III. System Study IV. Basic Programming (Including Files), V. Cobol Programming (Structured).

The Practicals on Radio and Shack Model II.

Weekdays 9.00 a.m. to 3.00 p. m

THE COURSE FEE 1-4 Modules ... 1,500/-
5th Module ... 1,500/- (with practicals)

OTHER COURSES OFFERED ARE:

1. Stenography Pitman London Rs. 45/- a month
2. Dress Making and Cake Making Rs. 40/- ,,
3. NCE or Special English Rs. 50/- 25/- ,,

Registeration on 20th of January, 1986 9.00 a.m.

C 85

# "ஊதியத்தை மறந்து ஒத்துழைக்கும் ஊழியர்கள்"

## வ.பி.போ.ச. தலைவர் பொங்கல் செய்தி

[யாழ்ப்பாணம்]

''வட பிராந்திய மக்களுக்காக, அவர்களது போக்குவரத்துச் சௌகரியங்களை முன்னிட்டு பல சிரமங்களின் மத்தியில் எமது சேவை நடத்தப்படுகிறது. அநேக சந்தர்ப்பங்களில், மக்கள் அநாதரவாகப் பயங்கர சூழ்நிலையில் விடப்பட்டபோது தமது உயிரைத் துச்சமாக மதித்துக் கடமையாற்றிய திறன்மிகு கடமை வீரர்களினால் மக்கள் பாதுகாப்புடன் புகலிடம் சென்றடைந்ததை எவரும் மறக்கமுடியாது'' என்று பொங்கல் தினத்தை முன்னிட்டு வட பிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு.சி. சனகரத்தினம் தமது ஊழியர்களுக்கும், மக்களுக்கும் விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அச்செய்தியில் அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது -

''மக்களின் நலனுக்காகத் தங்கள் முழுநேரத்தையும் அர்ப்பணித்து அயராது உழைக்கும் ஊழியர்கள் இரண்டாயிரம் பேர் எமது சபையில் கடமையாற்றுகிறார்கள். இந்த ஊழியர்கள் அனைவரும் ஒரே முகமாக எமது வட பிராந்திய மக்களின் போக்குவரத்து வசதிக்காக மிகத் திறமான ஒரு பஸ் சேவையை வழங்கவேண்டும் என்பதிலேயே கண்ணுங் கருத்துமாக இருப்பதையிட்டு இச்சபையின் தலைவர் என்ற முறையில் நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் துரதிர்ஷ்டவசமாக, எதிர்பாராத வகையில் எமது நாட்டில் ஏற்பட்ட, ஏற்படுகின்ற அசம்பாவிதம் காரணமாக நாம் எதிர்பார்த்த திருப்திகரமான பஸ் சேவையை எமது மக்களுக்கு வழங்கமுடியாமல் உள்ளது எனினும், எமது மக்கள் நிலைமையைப் புரிந்துகொண்டு எம் மீது குற்றம் சுமத்தாமல் எம்முடன் ஒத்துழைத்தனர்.

''மக்களின் சேவைக்காக உயிரைப் பணயம் வைத்து எமது ஊழியர்கள் சேவையாற்றிய சந்தர்ப்பங்கள் அநேகம் உள. அதே நேரத்தில் கடமையின் பொருட்டு உயிர் துறந்த ஊழியர்களின் புனித சேவைக்கான அஞ்சலியையும் நாம் செலுத்தாமல் இருக்க முடியாது. எமது சேவைக்காக மக்கள் வழங்கும் பணத்திலிருந்துதான் எமது ஊழியர்களின் ஊதியம் கொடுபடவேண்டிய நிலை ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் ஊதியத்தைக் குறித்த திகதிகளில் பெறமுடியாதிருந்த பொழுதிலும் அவற்றைப் பெரிதுபடுத்தாது ஊதியத்தை மறந்து எம்முடன் ஒத்துழைத்துச் சேவையாற்றிய எமது ஊழியர்களின் கடமை உணர்வை மறக்கமுடியாது.

''எமது புனிதமான சேவைக்கு மக்கள் எல்லோரும் மென்மேலும் ஆதரவு வழங்கி இச்சபையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக நிற்பீர்கள் எனவும் எதிர்பார்க்கிறேன். இச்சபையின் வளர்ச்சி உங்கள் போக்குவரத்து வசதியைப் பன்மடங்கு அதிகரிக்கும்.''

கலர் பிலிம் சுருள்களை
PROCESSING + PRINTING
செய்வதற்கு
கொழும்பு ஸ்ருடியோ

PATRICIAN INSTITUTE OF HIGHER STUDIES

COMPUTER

Programming Courses for Professionals and School leavers

(6 MONTHS COURSE)

Classes Commence on 18th January, 1986

WEEK-END COURSES

Lectures by:

Mr. N. S RAJAH,

B. Sc. (Eng.) Hons. (Lond) A. M. I. C. E. M. C. S.

★ கட்டிடப்படம் வரைதல் (DRAFTSMANSHIP) } 6 மாதகாலப் பயிற்சி (ஆங்கிலம்)

G. C. E. O/L பரீட்சை முடித்துக்கொண்டு இருக்கும் மாணவர்களுக்கு

ஓர் அரிய சந்தர்ப்பம்

1. வீட்டு மின் இணைப்பு (ELECTRICAL HOUSE WIRING)
2. கடைச்சல் யந்திர இயக்குநர் (LATHE OPERATOR)
3. மின் ஒட்டு வேலை (ARC WELDING)

மூன்று மாத காலப் பயிற்சி

3-1-86 வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது.

பதிவாளர்,
REGISTRAR,
59. சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

[A 72]

## பருத்தித்துறை சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வீட்டுக்குச் சென்றுவிட்டு திரும்பிக்கொண்டிருந்த குடும்பஸ்தரொருவர், இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காக்கி, யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் பருத்தித்துறையைச் சேர்ந்த வி. எஸ் விசாகமுத்து என்னும் 6 பிள்ளைகளின் தந்தையே துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகியவராவர்

பருத்தித்துறை 'கோட்ஸ்' வீதியிலுள்ள தமது வீட்டுக்குச் சென்றுவிட்டு இவர் திரும்பிக்கொண்டிருக்கையில் இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும், அதையடுத்து மயக்கமடைந்த அவர் உறவினரின் உதவியால் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுபின்னர் யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [ச]

## இவர்களுக்கு நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை அனுமதிக்காகக் கடந்த ஆண்டு ஜூலை டிசம்பர் மாதங்களில் நடந்த நேர்முகப் பரீட்சையில் தோற்றாத, விண்ணப்பதாரிகளுக்கு இம் மாதம் 28 ம் தேதி கல்வியமைச்சில் நேர்முகப்பரீட்சை நடைபெறும்.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் அனுமதிக்காக கடந்த ஆண்டு ஜூலை, டிசம்பர் மாதங்களில் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டது. அவ் வேளையில் குறிப்பிட்ட சில விண்ணப்பதாரிகளுக்கு நேர்முகப்பரீட்சைக்கான அழைப்பிதழ் கிடைக்கவில்லை அதனால் நேர்முகப் பரீட்சையைஅவர்களால் பங்கெடுக்க முடியாமல் போய்விட்டது. இதனைச் சுட்டிக்காட்டி இலங்கை ஆசிரியர் காங்கிரசுக்குப் புகார் சமர்ப்பிக்கப் பட்டதால் அதன் பொதுக் காரியதரிசி திரு. க. சிவஞானம் ஆசிரியர் பயிற்சிக் கல்விப் பணிப்பாளர் திரு. பியதிலகாவைச் சந்தித்து எடுத்துக் கொண்ட துரித நடவடிக்கையால் இம்மாதம் 28 ம்திகதிக்கு கல்வியமைச்சில் நேர்முகப் பரீட்சை நடத்த ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

## மீண்டும் வீதி சீர்கேடு

[மானிப்பாய்]

யாழ்ப்பாணத்தில் பெய்த பெரு மழை காரணமாக யாழ்ப்பாண நகரவீதிகள் மீண்டும் மோசமடைந்துள்ளன.

தார் அகன்று வெறும் கற்களே பல வீதிகளில் காணக்கூடியதாக இருக்கின்றது இதன் காரணமாக பாதசாரிகளும் வாகனங்களும் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்.

## மீனவர் பாதிப்பு: ஜனாதிபதிக்கு புகார்

[யாழ்ப்பாணம்]

நெடுந்தீவுக் கடற்பிராந்தியத்தில் குருநகரைச் சேர்ந்த ஏழைக் கடற்றொழிலாளர் அடிக்கடி தாக்கப்படுவதாக ஜனாதிபதிக்கு முன்னாள் யாழ். உதவி மேயர் திரு எம் அலோசியஸ் அனுப்பியுள்ள தந்தியில் தெரிவித்துள்ளார்

கடற்றொழிலாளரின் மீன்கள் அபகரிக்கப்படுவதாகவும், வள்ளங்கள்மீது சுடப்படுவதாகவும், இதனை நிறுத்த உடன் தலையிட்டு நடவடிக்கை எடுக்குமாறும் அத்தந்தியில் கோரியுள்ளார். [க]

# குவாட்ட மாலாவில் மீண்டும் மக்கள் ஆட்சி!

லண்டன். ஜன. 15.

தென் அமெரிக்க நாடான குவாட்டமாலாவில் கடந்த 30 ஆண்டுகளாக நிலவி வந்த இராணுவ ஆட்சி நேற்றுடன் முற்றுப்பெற்றுப் புதிய மக்களாட்சி மீண்டும் கொண்டு வரப்பட்டுள்ளது.

நாட்டின் புதிய தலைவராக மெனிஸியோ செரைஸோ பதவியேற்றுள்ளார். இவர் மத்திய கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்.

கடந்த முப்பது வருடங்களாக இருந்து வந்த இராணுவ ஆட்சி, நாட்டில் நிலவிய பொருளாதார மற்றும் நிதி நெருக்கடிகளினால் செல்வாக்கிழந்து வலிமையற்றுப்போயிற்று.

திரு. செரைஸோ பதவியேற்றபின் தமதுஆரம்ப உரையில் ''நாட்டில் தற்போது நிலவும் பிரச்னைகளில் முக்கியமானது பொருளாதார நெருக்கடியே. இதனைத் தீர்ப்பதே எனது அரசின் முக்கிய பணியாக இருக்கும்'' என்றார்.

இவ்வருடத்தில் பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி நீக்கம். பங்களாதேஷில் அரசின் சுதந்திரம் வழங்கப்பட்டமைஆகிய முக்கிய நிகழ்ச்சிகளுக்கு அடுத்தாகக் குவாட்டமாலாவில் மீண்டும் ஜனநாயக ஆட்சி ஏற்பட்டிருப்பது ஒரு குறிப்பிடத்தக்க விடயமாகும். (செ)

## மந்துவில் பலாத்கார வழக்கு; சாட்சிகள் வரவில்லை விசாரணை ஒத்திவைப்பு!

(யாழ்ப்பாணம்)

மந்துவில் பலாத்கார வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொண்ட போது பொலிஸாரை தவிர மற்றும் சாட்சிகள் எவரும் வராததினால் விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

இவ் வழக்கு நேற்றுக்காலை யாழ். மேல் நீதி மன்றத்தில் நீதிபதி எஸ் ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் எடுக்கப்பட்டது.

இவ் வழக்கில் 75 ஆகஸ்ட் 31 ம் திகதி மந்துவிலில், ஒரு பெண்ணைப் பலாத்காரம் செய்ததாகவும், 1500 ரூபா பெறுமதியான நகைகளைக் கொள்ளையடித்ததாகவும், வி. சந்தசாமி, ந. நடராசா ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி கே. வி. எஸ். சண்முகநாதன் ஆஜரானார். அரச தரப்பில் அரச சட்டத்தரணி எஸ். ஸ்ரீஸ்கந்தராசா ஆஜரானார்.

நேற்று பொலிஸாரை தவிர மற்றும் சாட்சிகள் எவரும் வரவில்லை.

சாட்சிகள் வராததினால் விசாரணை மார்ச் மாதம் 31 ம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது. (க)

## பஞ்சாப்..

[3ம் பக்கத் தொடர்ச்சி]

ளவென சுமார் 1500 அரச அதிகாரிகள் நேற்று பஞ்சாப் சென்றனர்,

இந்த ஆய்வின் இறுதியில் இப் பிரதேச மக்கள் மொழிவாரியாக எதிர் நோக்கும் பிரச்னைகள் அறிக்கையாகத் தயாரிக்கப்பட்டு நீதிபதி மத்தியு ஆணைக்குழுவிடம் கையளிக்கப்படும்.

இந்தியாவில் இவ்வாறு மொழி ஆய்வு ஒன்று நடத்தப்படுவது இதுவே முதல் தடவையாகும். (செ)

## தென்யேமனுக்கு

(3மபக்கத் தொடர்ச்சி)

லாம் என்றும், வடயேமன். சிரியா ஆகியவற்றுடன் நடத்திய ஆலோசனைகளையடுத்தே தாம் இந்த முடிவை எடுத்ததாகவும் அதிபர் கேர்ணல கதாபி அறிவித்துள்ளார்.

தென்யேமனில்இடம்பெற்ற ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சியையடுத்து அங்குஸ்திர ஆட்சியை ஏற்படுத்துவதில் அதிபர் கதாபி ஆர்வங்காட்டுவதாகவும் கூறப்பட்டது.

வடயேமனில் இராணுவத்துடன் சேர்ந்து தரைமார்க்கமாகத் தமது இராணுவம் தென்யேமனுக்கு அனுப்பப்படும் என்று அவர் அறிவித்துள்ளார்.

இதேவேளை தமது நாட்டு விவகாரத்தில் வெளிநாடுகள் தலையிடுவது தவிர்க்கப்படவேண்டுமென்று தென்யமன் பிரதமர் கூறியுள்ளார். (கி)

## ரூபவாஹினி

ஜனவரி 16 வியாழக்கிழமை மாலை;

5-00 செய்திகள்
5-05 'பீட்டில்ஸ்' கார்ட்டூன்
5-30 ஆங்கிலப் பாட நிகழ்ச்சி
5-45 உங்களால் முடியுமா? சிறுவர் நிகழ்ச்சி
6-00 விலங்கு இராச்சியம்
6-30 செய்திகள் (தமிழ்)
6-55 'மப்பட் ஷோ'
7-25 'அந்துள' (நடப்பு நிகழ்ச்சி)
8-00 செய்திகள் (சிங்களம்)
8-25 'குறுல கடல்ல' (ரெலி நாடகம்)
9-00 செய்திகள் (ஆங்கிலம்)
9-30 நடன மஞ்சரி
9-55 உலக யுத்தம்
10-50 ஒளிபரப்பு முடிவு

## 65 வயது வயோதிபரின் தலையில் அடித்து விட்டு சைக்கிளைப் பறித்துச்சென்றனர்

(யாழ்ப்பாணம்)

தாம் பணி புரியும் ஸ்தாபனத்தின் மனேஜரைச் சந்திப்பதற்காக சென்றுகொண்டிருக்கையில் கடந்த 8 ம் திகதி இரவு 8 மணியளவில் ஆஸ்பத்திரி சந்தி கோயில் முன்பாக தலையில் தாக்கிவிட்டு தனது சைக்கிளையும் டோர்ச்லைட்டையும் இனந் தெரியாதவர்கள் பறித்துக் சென்று விட்டார்கள். என்று அப்பாஸ்பாய் அப்துல் கரீம் என்பவர் புகார் தெரிவித்துள்ளார்.

தாம் 65 வயது நிரம்பிய வயோதிபர் என்றும் கே. துரைசிங்கம் அன் கம்பனியில் 27 வருடங்கள் வேலை செய்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். தலையில் அடிபட்டதால் இவர் தற்பொழுது யாழ். ஆஸ்பத்திரியில் 6 ம் வார்ட்டில் சிகிச்சை பெற்று வருகிறார்.

பம்பாயைச் சேர்ந்த இவர் 47 வருடங்களாக யாழ்ப்பாணத்தில் இருந்து வருகிறாராம் சைக்கிளை எடுத்துச் சென்றவர்கள் மனிதாபிமானம் கருதி திரும்பத் தரும்படி பணிவாக கேட்டிக்கொள்ளும் இவர் தமது நிலைக்கு இரங்கி அறிந்தவர்கள் அதனைப் பெற்றுத் தரும்படியும் கேட்டுக்கொள்கின்றார்.

# "லொறிகளில் வந்தவர்கள் சரமாரியாக சுட்டனர்"

(யாழ்ப்பாணம்)

''லொறிகளில் வந்தவர்கள் வீடுகளை நோக்கிச் சரமாரியாகச் சுட்டபோது வீட்டுக்குள் இருந்த எனது தந்தையின் காலில் காயம் ஏற்பட்டது.''

துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான புளியங்குளத்தைச் சேர்ந்த கதிரவேலு முருகேசுவின் (69 வயது) மரணவிசாரணையில் சாட்சியமளித்த மகன் மு. சிறுத்தொண்டன் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். பதில் நீதவான் க. கேசவன் முன்னிலையில் யாழ். ஆஸ்பத்திரிப் பொலிஸ் பகுதியில், நேற்றுமுன்தினம் மாலை மரணவிசாரணை நடைபெற்றது. சிறுத்தொண்டன்மேலும் கூறியதாவது: ''இம்மாதம் 11-ம் திகதி பிற்பகல் 5 மணியளவில், ஓடும் லொறியிலிருந்தவாறு சுட்டுக்கொண்டு வந்தார்கள். அப்பகுதி மக்கள் வீடுகளுக்குள் சென்று முன் கதவைப் பூட்டிக்கொண்டார்கள் நானும், சிலரும் பின்பகுதிக்கு ஓடிவிட்டோம், லொறியில் வந்தவர்கள் வீடுகளை நோக்கிச் சுட்டுக்கொண்டு சென்றார்கள். லொறிகள் சென்றபின்னர் 6 மணியளவில் வந்து பார்த்தேன். வீட்டுக்குள் இருந்த என் தந்தை தொடையில் காயமடைந்திருந்தார் இரத்தம் வழிந்தோடிக்கொண்டிருந்தது. இரவில் ஆஸ்பத்திரிக்குப் போகமுடியவில்லை. காலையில் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்குச் சென்று அங்கிருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு வந்தோம். 14ம் திகதி காலை தந்தையார் மரணமானார்.''

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு மரண விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

## நீர்வேலியில் நாளை கற்பூரத் திருவிழா

[யாழ்ப்பாணம்]

நீர்வேலி கந்தசுவாமி கோவில் கற்பூரத் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது.

பகல் சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து இரவு ஆறுமுகப் பெருமான், வள்ளி தெய்வவானை சமேதரராய் கற்பூர தீபாலங்காரத்தோடு வீதிவலம் வருவார்.

## வல்வெட்டித்துறை நகரசபை முக்கிய அறிவித்தல் 1986

1985ம் ஆண்டு விதிக்கப்பட்ட விகிதமே இவ்வருடம் சோலைவரியாகவும் உறுப்புரிமைக் கட்டணம், வண்டி வாகன வரி, மலகூடவரி ஆகியவையாகவும் விதிக்கப்பட்டுள்ளது. புறநடைகள் தவிர வீதவரி 42/79ம் இலக்கச் சட்டத்தின்படி 1986ம் ஆண்டு ஜனவரிமாசத்துள் செலுத்தி பத்து வீதக் கழிவைப் பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2. அமுலிலுள்ள அவசர காலவிதிகளாலும் ஏனையகாரணங்களினாலும் பூட்டப்பட்டுள்ள நிலையிலுள்ள மனைத் தலங்ககள், கடைகள் பற்றிய அறிவித்தலை உரியநேரத்துள் அலுவலகத்தில் கிடைக்கச் செய்து உரியநிவாரணத்தைப் பெறலாம்.

3. 1986ம் ஆண்டிலிருந்த ஓர் ஐந்தாண்டுத்திட்டம் வகுக்க தங்கள் வட்டாரத்தில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்திகளைப் பகுதிக் கிராம அபிவிருத்திச் சங்கம் மூலமாகவோ சனசமூக நிலையங்களுக்கூடாகவோ சமர்ப்பித்தால் முன்னிலைப்படுத்தி நடைமுறைப்படுத்தலாம்.

4. வலயப் பிரகடனத்தால் வீட்டைவிட்டு இடம் பெயர வேண்டி இருப்பின் எமக்கு அறியத்தந்தால் மின்மானியைஅகற்றி உதவலாம். அத்துடன் வரி நிவாரணமும் கிடைக்கும்.

தயவுசெய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும்.

**க. சுப்பிரமணியம்,**
செயலாளர்,
நகராட்சி மன்றம்'
வல்வெட்டித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை,
01-01-1986. [C82]

## அரவம் தீண்டி மரணம்

[யாழ்ப்பாணம்]

தோட்டத்திற்கு நீர் இறைக்கச் சென்ற விவசாயி ஒருவர் அரவம் தீண்டி மரணமானார்.

இச்சம்பவத்தில் காரைநகரிலுள்ள களபூமியைச் சேர்ந்த காசிநாதன் சண்முகம் [54-வயது] என்னும் ஏழு பிள்ளைகளின் தந்தையே நேற்று இவ்வாறு பலியானவராவார்.

மரணவிசாரணை நடாத்திய யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு. க. கேசவன் பாம்புக்கடியாலேற்பட்ட மரணமெனத் தீர்ப்பளித்தார். (ச)

## மகாபொல புலமைப்பரிசில் மாணவர்கள் கவனத்துக்கு

[யாழ்ப்பாணம்]

1985 - 86ம் கல்வி ஆண்டில் புதிய மாணவர்களுக்கு மகாபொல புலமைப்பரிசில் வழங்குதல் சம்பந்தமான ஆவணங்களில் மாணவர்களின் கையெப்பம்பெறுவதற்காகவர்த்தககப்பற்துறை அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் இன்று வியாழன் யாழ். பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்யவுள்ளனர்.

இத்தினம் புலமைப்பரிசில் பெறவுள்ள மாணவர்கள் பல்கலைக்கழக மாணவர் ஆலோசனைச் சபைக்குதவருது வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## கி. சேவையாளர் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை மேற்கு கிராமசேவையாளர் பகுதியில் விபரம் தெரியாத நிலையில் பதிவு செய்யப் படாதிருந்த திருமணப் பதிவுகள், பிறப்பு இறப்புப் பதிவுகள் யாவற்றையும் பதிவதற்கேற்ற ஒழுங்குகளை வட்டு மேற்கு கிரமசேவையாளர் திரு. க. சிறிகரன் மேற்கொண்டு வருகிறார்.

இதுவரை நூற்றுக்கு மேற்பட்ட பதிவுகள்செலவுச்சுருக்கத்துடன் நெறிப்படுத்தி பதியப்பட்டுள்ளன. விபரங்கள் தெரியாத நிலையில் இதுவரை பதிவு செய்யாதோர் தம்முடன் தொடர்பு கொண்டு பதிவுகளை செய்யுமாறு க.சிறிதரன் கேட்டுள்ளார். (ச)

## சன சமூகநிலைய நன்கொடைகள்

[கொழும்புத்துறை]

வடபகுதிச் சன சமூக நிலையங்களுக்கான கடந்த வருட அரசாங்க நன்கொடைப் பணத்தைத் தாமதமின்றிப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். மாவட்ட சன சமூக நிலையங்களின் சமாஜப் பொதுச் செயலாளர் திரு சி. சி. வரதராசாவும், உள்ளூராட்சி திணைக்களச் சன சமூக நிலைய மேற்பார்வையாளருமான திரு. வே. கந்தசாமியும் சகல சன சமூக நிலையங்களுக்கும் அறிவித்துள்ளனர்.

இந்த நன்கொடைப்பணம் யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளரினால் யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை அப அலுவலகங்களுக்கு உனுப்பி வைக்கப்பட்டு விட்டது.

# யாழ். நகைக்கொள்ளையின் எதிரொலி: மறியல்போராட்டம்! வேலை நிறுத்தம்!

[யாழ்ப்பாணம்]

நகைக்கடை கொள்ளையை ஆட்சேபித்து ஆரம்பித்துள்ள வழிமறிப்புப் போராட்டத்திற்கும், நகைக்கடை தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்திற்கும் ஆதரவு வழங்குமாறு நகைத்தொழிலாளர் துண்டுப் பிரசுரம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அந்தவேண்டுகோளில் கூறப்பட்டுள்ளதாவது;

''வேலைத்தலங்களில் துப்பாக்கிகள் சகிதம் வந்த இனந்தெரியாத இளைஞர்கள் எமது தொழிலாளர்களை ஆயுதமுனையில் அறைக்குள் பூட்டி வைத்து பெருந்தொகையான தங்கப்பவுண்களை கொள்ளையடித்துச் சென்றிருக்கும் செயலை வன்மையாகக் கண்டிக்கின்றோம். சொந்த ஊரில் இருந்தும் இடம்விட்டு இடம் மாறிவந்தும் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்காக கிழக்கு மாகாணங்களில் அதாவது தொழிலாளர்களின் சொந்த ஊரில் தங்கள் உறவினர்களின் உயிரையும் உடமையையும் இழந்த நிலையிலும் சகித்துக்கொண்டு தங்களின் பிழைப்புக்காக தொழில்செய்யும் அப்பாவித் தொழிலாளர்களின் கையில் இருந்து இயக்கமொன்றின் பெயர்சொல்லி இந்த கபடவேலை நடந்திருக்கின்றது. இந்தவேலை எம்மால் கண்டிக்கப்படாவிட்டால் தொடர்ந்து நாளை உங்களுக்கும் நேரலாம்

''இந்தச் செயலை கண்டித்து தொழிலாளர்களாகிய நாம் ஒன்றுதிரள்வோம். எமது ஒற்றுமையின் தன்மையால் வெற்றிகரமாக ஒரு வேலை நிறுத்தம் மேற்கொள்வோம். நாம் செய்யும் இந்த வேலை நிறுத்தம் புனித இயக்கங்களின் கண்களை திறக்கட்டும். மாசுமறுவற்ற, உயிரைத் துச்சமென மதிக்கும் எமது இயக்கப் போராளிகளின் கவனத்தை ஈர்த்து எமது தொழிலாளர்களுக்கு விமோசனம் கிடைக்கும் வகையில் எமது வேலை நிறுத்தம் தடையேதுமில்லாமல் தொடரட்டும்.

''தொழிலாளர்களாகிய நாம் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டிருகின்றோம் அப்பாவித் தொழிலாளர்களாகிய எங்கள் வாழ்க்கை உங்கள் கைகளில்தான் தங்கியுள்ளது. எனவே எமது வேலைநிறுத்தத்தை மனதார ஆதரித்து எமக்காக எமது விமோசனத்திற்காக உங்கள் கடைகளை பூட்டிவையுங்கள் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.'' (க)

# தம்பலகாமத்தில் இளைஞர் பலி!

(திருகோணமலை)

தம்பலகாமத்தில் இளைஞர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

குறிப்பிட்ட இளைஞர் இராணுவத்தினரின் விசாரணைக்குட்பட்டபோது தப்ப முயன்றதாகவும் அதனைத் தொடர்ந்து அவர் சுடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது,

# ஆண்டு ஏழு வகுப்பு யாழ். இந்துவில் ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் ஏழு ஆண்டு வகுப்பு ஆரம்பிப்பதற்கு யாழ். கல்வித் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது.

நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சு. சிவவிநாயக மூர்த்தியின் சிபாரசின் மீது அனுவதி கிடைத்துள்ளது.

இப்பாடசாலையில் ஆண்டு 6-ம் வகுப்பில் [5ந்தரம்] படித்த மாணவருககே இப்புதிய வகுப்பில் இடம் கொடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மாணவர்கள் ஆண்டு 7ம் வகுப்பில் சேர்வதற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைக் குறைப்பதற்காகவேதற்காலிகமாக இந்த ஆண்டு 7 வகுப்பு நடாத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாம்.

நல்லூர் கல்வி வட்டாரத்தில் ஏற்கனவே இளையதம்பி வித்தியாசாலை, பரஞ்சோதி வித்தியாலயம், சலட்டி மெதடிஸ்த மிஷன் பாடசாலை ஆகிய மூன்றிலும் ஆண்டு 7 வகுப்புகள் இவ்வருடம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஐ)

## இன்றைய பலன்

மாதம்- தை
திகதி- 3 (1886-1-16)
கிழமை- வியாழன்
திதி- ஷஷ்டி பி. ப.வரை
நட்சத்திரம்- உத்தரட்டாதி முன்இரவுவரை

மேடம்- நிதியில் முடக்கம் ஏற்படும். சிலர் வீண்பழி கேட்க நேரிடும், விவசாயிகள் தொல்லை அதிகரிக்கும். துணிச்சலுடன் எதிர்நீச்சல் போட்டால் வெற்றிஉண்டு.

இடபம்- கொள்கையில் கோணலால் அரிய சந்தர்ப்பமொன்று நழுவக் கூடும். மோதவரும் பகையில் மோசடி நடக்கும். சகோதர வழியால் சஞ்சலமுண்டு.

மிதுனம்- அடக்கமான நடவடிக்கைகளால் மறறவர்களின் மனதைக் கவருவீர்கள். ஆக்கப்பணியில் அதிகம் ஈடுபடுவீர்கள். அன்னைவழி ஆதரவும் உண்டு.

கடகம்- உண்மை இன்று ஊமையாகிவிடும். உதவிசெய்யப்போய் உபத்திரவத்தை விலை கொடுத்து வாங்குவீர்கள். செலவுவகைகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும்.

சிங்கம்- கனிவான நினைவுகளில் இன்று ஆனந்தமாக மிதந்து செல்வீர்கள். கல்வித் துறையில் சிறப்புக்கு இடமுண்டு. கணவன் மனைவி வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாக அமையும்.

கன்னி- உல்லாசமாகப் பொழுதைக் கழிப்பீர்கள். இன்று அதிக சுறுசுறுப்புடன் செயலாற்றுவீர்கள். பிள்ளைகளின் நடவடிக்கைகள் பெருமையைத் தேடித்தரலாம்.

துலாம்- முன்னேற்றப் பாதையில் தடைகள் பல தாக்கும். இருள் படர்ந்த சம்பவமொன்று மீண்டும் நினைவுக்கு வந்து வேதனையைத் தரும். மின்னியல் பகுதியில் கடமையாற்றுபவர்கள் கவனத்துடன் இருக்கவும்.

விருச்சிகம்- குடும்ப நலனில் அதிக ஆர்வம் பிறக்கும். எதிர்த்தவர்களே ஆதரவு தருவதற்கு முன்வருவார்கள். வெற்றி உமதருகில் விரைந்து வரும்.

தனுசு- மற்றவர்களின் ஏளனப் பார்வைக்கு இலக்காகாமல் பணத்துடன் பழகுபவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவும். கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற முடியாமல் திண்டாடுவீர்கள்.

மகரம்- அன்புக் கரங்கள் அணைக்கும். அதிர்ஷ்ட தேவதையின் பார்வையும் படியலாம். தக்கசமயத்தில் தந்தையின் ஆதரவும் கிடைக்கும்.

கும்பம்- இதயத்தின் ஏக்கம் இன்று தணியும். தேடியது காலடியில் சரணடையும் நண்பர் ஒருவரால் உதவியும் உண்டு.

மீனம்- முத்தான சந்திப்பு ஒன்று கிடைக்கும். முதியவர் ஒருவரின் ஆதரவுண்டு. வருமானத்தில் அபிவிருத்தி காணப்படும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## கப்பல் சேவை

(கொழும்பு)

தலைமன்னார் இராமேஸ்வரம் கப்பல் சேவை மீண்டும் அடுத்த மாதம் முதலாம்திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன இதற்கான நடவடிக்கைகளை போக்குவரத்து அமைச்சு எடுத்துள்ளது.

83 ம் ஆண்டு யூலை இனக்கலவரத்தின் பின் தலைமன்னார் இராமேஸ்வரம் கப்பல் சேவை தொடர்சியாக நடைபெறுதிருந்தது தெரிந்ததே.

இதற்கிடையில் கொழும்பு-தலைமன்னார் ரயில் சேவை இம் மாதம் 31 ம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன இதற்கான பிரயாணச் சீட்டுக்களை இம் மாதம் 25 ம் திகதி முதல் விற்பதற்கான ஒழுங்குகள் செய்யப்படவுள்ளன. [ச-ய]

## திருமலையிலிருந்து மேலும் அகதிகள்

[யாழ்ப்பாணம்]

திருமலையிலிருந்து மேலும் பல குடும்பங்கள் வந்து கொண்டிருக்கின்றனர். இவர்கள் படகுகள் மூலம் முல்லைத்தீவு வந்து அங்கிருந்து பஸ்கள் மூலம் யாழ்ப்பாணம் வருகிறார்கள்.

பன்குளத்திலிருந்து ஆறு பேரைக்கொண்ட குடும்பம் ஒன்று நேற்று யாழ். நகர் வந்துள்ளது. இவர்கள் தமிழ் மகளிர் அவையினரின் அகதிகள் முகாமில் தங்கியுள்ளனர். கடந்த வாரமும் இந்த முகாமிற்கு திருமலையிலிருந்து அகதிகள் சிலர் வந்துள்ளனர். [க]

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# கோட்டை மீதான தாக்குதல்

## அரசு அறிக்கை

[கொழும்பு]

தைப்பொங்கல் தினத்தன்று அதிகாலை யாழ்ப்பாணம் கோட்டை இராணுவ முகாம் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் பலத்தகாயம் அடைந்ததாகவும், அதில் ஒருவர் பின்னர் மரணமானதாகவும் இத்தாக்குதல் இராணுவத்தினரால் முறியடிக்கப்பட்டதாகவும், தேசிய பந்தோபஸ்து அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தன்னியக்கத் துப்பாக்கிகள், கிறனேற், மோட்டர்கள் சகிதம் தீவிரவாதிகள் இத்தாக்குதலில் ஈடுபட்டதாகவும், இச்சம்பவத்தில் பொதுமக்கள் சிலர் காயமடைந்திருக்கலாம் அல்லது கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் அறிக்கை கூறுகிறது.

இச்சம்பவத்தில் தீவிரவாதிகள் பலத்த காயமடைந்திருக்கலாம் என்று ஆயுதப்படையினர் நம்புவதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஈ.பி.ஆர்.எல்.எவ். அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தாக்குதல் ஒன்றை நடாத்தும் நோக்குடன் யாழ். கோட்டையிலுள்ள இராணுவம் புறப்படவிருப்பதாக கிடைத்த தகவலையடுத்து இதனைத் தடுத்து நிறுத்தும் நோக்குடன் தைப்பொங்கல் தினத்தன்று அதிகாலை ஆறுமணியளவில் யாழ். கோட்டை மீது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இராணுவப் பிரிவாகிய 'மக்கள் விடுதலைப்படை' தாக்குதலை நடத்தியது. இத்தாக்குதலின் போதுபாதுகாப்புப் படையினரின் தரப்பில் காயமும் உயிரிழப்பும் ஏற்பட்டது'' என்று 'ஈழமக்கள் செய்தி தொடர்பு நிலையம்' சென்னையில் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கை மேலும் கூறுவதாவது:

தைப்பொங்கல் தினத்தன்று அதிகாலை ஆறு மணியளவில் யாழ் கோட்டை மீது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ. பி. ஆர். எல். எவ்.) இராணுவப்பிரிவாகிய 'மக்கள் விடுதலைப் படை' தாக்குதலை நடத்தியது. மக்கள் விடுதலைப்படையின் இந்தத் தாக்குதலின் போது பாதுகாப்புப்படையினரின் தரப்பில் பலர் காயமடைந்ததாகவும், இருவர் கொல்லப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இத்தாக்குதலின் போது மக்கள் விடுதலைப் படைக்கோ பொதுமக்களுக்கோ எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.''

## கூட்டுப்படை தளபதி கருத்து

இதே நேரத்தில் கூட்டுப்படைத்தளபதி லெப்டினன்ட் சிறில் ரணதுங்க விடுத்துள்ள அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

''யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள சகல தீவிரவாதிகளின் தளங்களும் எங்களுக்குத்தெரியும். அவற்றுக்குள் புகுந்து இராணுவ நடவடிக்கை எடுக்க விரும்பவில்லை. ஏனெனில் போர்நிறுத்தத்தை அனுசரிக்க விரும்புகின்றோம்.

கூட்டுப்படைத் தலைவர் லெப்டினன்ட் சிறில் ரணதுங்கா நேற்று முன்தினம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

''தீவிரவாதிகள் தைப்பொங்கலுடன் புதிய தாக்குதலை ஆரம்பித்துள்ளனர். பொதுமக்கள் விழிப்பாக இருக்கவேண்டும். தீவிரவாதிகளின் முகாம்களுக்கு அருகில் பொதுமக்கள் வசிக்க வேண்டாம். அவர்களை வீடுகளில் அனுமதிக்கவேண்டாம். அவர்களுக்கு எந்தவிதமான ஆதரவும் வழங்கவேண்டாம்.'' (க)

## ரூ. 5 லட்சம் நகை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போடப்பட்டது. நகைக்கடைகள் எதுவும் திறக்கப்படவில்லை.

பொங்கலுக்கு முதல்நாள் இரவு எட்டு மணியளவில் ராஜேந்திரா ஒழுங்கையிலுள்ள ஒரு வீட்டிற்கு சைக்கிளில் 'கிறனேட்', துப்பாக்கிகள் சகிதம் வந்த ஒன்பது நபர்களே இக்கொள்ளையை நடத்தியுள்ளனராம்.

ஒரு இயக்கத்தின் பெயரைக் கூறிய தங்க நகைகளை அபகரித்தனராம்.

குறிப்பிட்ட வேலைத்தளத்தில் இருந்த ரெலிவிஷன் வானொலி என்பன கொள்ளையடிக்கப்படவில்லை.

### பிந்திய செய்தி

கொள்ளையடிக்கப்பட்ட நகைகளை ஒருவாரகாலத்துக்குள் மீண்டும் திருப்பி ஒப்படைக்காவிட்டால் மறியல் போராட்டமும் வேலைநிறுத்தங்களும் தொடரும் என்றும், அதுவரை விதித்தடைகளைச் செய்வதில்லை என்றும் கொள்ளைச்சம்பவத்தைக் கண்டித்து நேற்றுமாலை நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் நகைத்தொழிலாளர்கள் தீர்மானித்தார்கள்.

இதையடுத்து 12 பேர் கொண்ட குழுவொன்றும் அமைக்கப்பட்டது. (ஐ)

## சரக்கு ரயிலில் உணவுப்பொருள் அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை ரயில் நிலையக்களஞ்சியத்துக்கு சரக்கு ரயில் வண்டியில் கொண்டு செல்லப்பட்ட இரண்டு வகன் சினிமூடைகள் மற்றும் உணவுப்பொருட்கள் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுப்பிற்பகல் மல்லாகம் ரயில் நிலையத்தில் இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது.

சரக்கு ரயில் வண்டியை தடுத்துநிறுத்திய இனந்தெரியாத நபர்கள் இக்கொள்ளையில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது. (மா)

## மரண அறிவித்தல்

### து. சேனுதிராசா

யாழ்ப்பாணம் 116, அம்பலவாணர் வீதியைச்சேர்ந்த துரையப்பா சேனுதிராசா சட்டத்தரணி (முன்னாள் உதவித் தொழில் ஆணையாளர்) காலமானார். இவர் சரஸ்வதியின் அன்புக்கணவரும், பாலசிங்கத்தின் சகோதரரும். டாக்டர் பத்மஸ்ரீரங்கன் [இந்தியா], விஜயஸ்ரீ (பொறியியலாளர், லண்டன்), கிருஷ்ணதாசன் [கம்பியூட்டர் தொழில் நுட்பவியலாளர் ஜெர்மனி]. வத்சலா [கணக்காளர்], சற்குணதாசன்[கனடா] ஆகியோரின் அன்புத்தந்தையும், மேனகாவின் [லண்டன்] மாமனாரும், திருமதி சின்னத்துரையின் மருமகனும், திருமதி பரஞ்சோதி [ஆசிரியர் நைஜீரியா], திருமதி நாகேசன் (ஆசிரியர், மானிப்பாய் இந்து மகளிர்கல்லூரி), செல்வி சுகுணதேவி (சென் அந்தனீஸ் கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிச்சடங்குகள் 16-01-1986 வியாழக்கிழமை [இன்று] மாலை 4-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

[C-230]

## புத்தநிறுத்தம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஈழதேசிய விடுதலை முன்னணி போர் நிறுத்தஉடன்பந்தத்திலிருந்து விலகியதாக பத்திரிகையில் வெளிவந்த செய்தி தவறானதென்றும் இதுபற்றி அரசாங்கத்துக்குத் தாம் தெரிவித்துள்ளதாகவும் திரு. டிக்ஸிற் குறிப்பிட்டுள்ளார். (மா-ய)

## ஆலங்கேணி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வீசினர்கள் இதனல் அவர் மரக்குடன்றி குழந்தையும் உயிரிழந்தது. பத்துதீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இவர் 1978ம் ஆண்டு பாங்ஹொங்கில் நடைபெற்ற ஆசிய விளையாட்டு விழாவில் குறிபார்த்துச்சுடும் போட்டியில் இலங்கையின் சார்பில் பங்கு பற்றினர்.

198'ம் ஆண்டுகுறிபார்த்துச்சுடும் போட்டியில் ஜனதிபதி விருது பெற்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### ஊர்காவல் படையினரும் பலியானர்கள்

திருகோணமலை ஆலங்கேணிச்சம்பவத்தில் பலியானவர்களில் நான்குஊர்காவற்படையினரும் அடங்குவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்பது பேரடங்கிய கடற்படை 'கொமாண்டோ' குழுவுக்கு தலைமை வகித்துச் சென்ற ஜனுப பஹார் கண்டியைச் சேர்ந்தவர். (பி)

## மரண அறிவித்தல்

### திரு. ஏரோணி பிலிப்

பாஷையூரைச் சேர்ந்த முன்னள் யாழ். மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அதிகாரியும், (D F E O.), தற்போது யாழ். மாவட்ட கடற்றொழில் விரிவாக்க சேவா சங்கங்களின் சமாசத்தின் தலைவருமாகிய, திரு. ஏரோணி பிலிப் அவர்கள் 13-1-86 அன்று காலமானர். இவர் காலஞ்சென்ற பார்பராவின் அன்புக் கணவரும், அருள் (U K.), ராஜன் (பிரான்ஸ்), றஞ்சன் (இந்தியா), றவி (இந்தியா), பவானி, ரஞ்சனி ஆகியோரின் அன்புத்தந்தையும் அருள் மேரிதாவின் (லங்காசீமெந்து லிமிடெட்) மாமனாரும், பிரான்சிஸ் (சவுதிஅரேபியா), தங்கம், வின்சென்ற் (சுவிற்சர்லாந்து) ஆகியோரின் அன்புச்சகோதரரும், பிளசம், பொனுண்டோ (ஆசிரியர்). லெனிற், அருட்செல்வி தியோடாவ் (அபோ, ய ர்ன்னியர்மடம் ம. வி.) றெபின் (அவுஸ்திரேலியா), கிளிமேற் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், அருளானந்தம். அமிர்தம்மா ஆகியோரின் மருமனும் ஆவார், அன்னாரின் பூதவுடல் 18-1-86 சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

20, புனித அந்தோனியார் வீதி,
பாஷையூர்,

C 220

## மரண அறிவித்தல்

### த. தம்பித்துரை

தெல்லிப்பழையைச் சேர்ந்த திரு. தம்பிராசா தம்பித்துரை 11-01-86 சனிக்கிழமை இரவு இறைவனடி எய்தினர். இவர் சின்னத்தங்கச்சியின் அன்புக் கணவரும், விவேகானந்தன் (சீமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை). இராஜேஸ்வரி, அருளானந்தன் (ஜேர்மனி), யோகானந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையாரும். தெய்வநாயகி, பேரின்பநாயகம் (இ. போ. ச., கோண்டாவில்) ஆகியோரின் அன்பு மாமனரும். பிரதீபன், பிரபாலினி, கிருபாலினி, ரஜினி, றூபினி ஆகியோரின் அன்புப்பேரனுமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் 12-01-86 மாலை தெல்லிப்பழை மயானத்தில் நடைபெற்றது உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்,

கொல்லங்கலட்டி வீதி,
தெல்லிப்பழை.

(C 228)

## மரண அறிவித்தல்

### திருமதி தையல்முத்து மூத்ததம்பி

இணுவில் தெற்கைச் சேர்ந்த திருமதி தையல்முத்து மூத்ததம்பி 13-01-86இல் காலமானார். இவர் க. மூத்ததம்பியின் அன்பு மனைவியும், பரமேஸ்வரி, பாக்கியவதி, இந்திராணி, தேவாம்பிகை, சிவசுப்பிரமணியம், ஞானேஸ்வரி: விக்னேஸ்வரி. மனோரஞ்சிதம், ரதிமலர் ஆகியோரின் அன்புத்தாயாரும், S K செல்லத்துரை, A. ரகுநாதன், A சிவசுப்பிரமணியம், S. பாலசிங்கம், துரைராஜா, G. உமாதேவி ஆகியோரின் அன்பு மாமியும், ஸ்ரீரங்கநாதன், ஸ்ரீஜெகநாதன், ஸ்ரீஜெகநாயகி. ஸ்ரீபத்மநாதன், ஸ்ரீரங்கநாயகி. ஸ்ரீயோகநாயகி, ஸ்ரீசிவநாயகி, ரமோனி, மங்களரூபி,ஜெயசக்தி, ஸ்ரீவிஜி, முருகானந்தன், தருமானந்தன், அநுரானந்தன். துசாந்தி, துசானி. துஷ்யந்தி, துர்யனா, சுபாகரன், சுபாமா, சுபாமதி. சுபஉமா. நரேந்திரன், சர்வேந்திரன், துஜீவன் ஆகியோரின் அன்புப்பேத்தியுமாவார், அன்னாரின் ஈமக்கிரியைகள் 15-01-86 புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தாவடி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. உற்றார். உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஸ்ரீரங்கநாதன்,
இணுவில் தெற்கு.
இணுவில்.

(C 217)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜனவரி மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126.

## மரண அறிவித்தல்

### திரு. பொ. பாலசிங்கம் (கனகசபை)

புங்குடுதீவு 11ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்ப்பாணம் ஓட்டுமடவீதி இல.19ல் வசிப்பவருமாகிய பொன்னையா பாலசிங்கம் (கனகசபை) 15-01-86ல் காலமானர். இவர் பார்வதியின் அன்புக் கணவரும், பரமேஸ்வரி. இராசமணி, பாலசுந்தரம் (கஸ்தூரியார் வீதி, தெய்வநாயகி அடைவுக்கடை உரிமையாளரும், கொழும்பு வர்த்தகரும்) ஆகியோரின் தகப்பனரும். பரராசசிங்கம், ஆசைநாயகம் அச்சக்கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த சித்திரவேலு, தெய்வநாயகி ஆகியோரின் மாமனாரும், நா. சந்தையாவின் மைத்துனரும். திருக்குமார் (ஜேர்மனி), சத்தியகுமார், சுசீர்தா, கௌரி, ஜெயந்தன், ஜெயந்தன், விஜிதா, நந்தினி, பாமினி, மயூரன், தெய்வபாலன், தெய்வமலர். பாரதி, லதா, சிந்து. கவிதா ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
மருமகன் பரராசசிங்கம்

(C 231)